Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
WEDNSDAY, NOVEMBER 10, 2021

புதன்கிழமை நவம்பர் 10, 2021 | ஒளி: 07 கதிர்: 149 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE ரூ.10



### இயற்கையின் கோர தாண்டவத்தால்

# 12 பேர் பலி; 28,000 பேர் பாதிப்பு

யாழ்., கிளிநொச்சியில் பாடசாலைகள் இல்லை.
அவசரம் எனின் 117க்கு அழையுங்கள்.
பல இடங்களில் மின் தடை.
கடலுக்குச் செல்ல வேண்டாம்.
ரம்புக்கனையில் மூவர் பலி.
மண்சரிவில் தாதி மரணம்.
71 பேரை மீட்டது கடற்படை.

முழுச் செய்தி P3

## கால எல்லை நீடிப்பு




2021 ஆம் ஆண்டு கல்விப்பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருப்போர், பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் கால எல்லை, நவம்பர் 20ஆம் திகதி வரையிலும் நீடிக்கப்பட்டுள்ளது என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

### அனர்த்தத்தை எதிர்கொள்ள

## தயார் நிலையில் விமானப்படை

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக எதிர்வரும் சில நாள்களில் ஏற்படக்கூடிய அனர்த்தத்தை எதிர்கொள்ள விமானங்களையும் அது தொடர்பான பணியாளர்களையும் நிலைநிறுத்துமாறு விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன பணிப்புரை விடுத்துள்ளார்.

நாட்டின் பல பகுதிகள் வெள்ளம், மண்சரிவு அபாயத்தில் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்தமைக்கு அமையவே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## "வாக்களித்த மக்களை ஏமாற்றமாட்டேன்"

### பிறந்தநாளில் ஜீவன் உறுதி

■ எஸ் சதீஸ்



கடந்த பொதுத் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸையும் என்னையும் நம்பி வாக்களித்த எனது மக்களை ஒரு போதும் நான் ஏமாற்றமாட்டேன் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் வீடமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் உறுதியளித்தார்.

தொடர்ச்சி P2

## பயணம் தோற்றுவிட்டதால் மாற்றமே தேவையாகும்

### கண்டியில் தெரிவித்தார் குமார வெல்கம

■ சேஹ்ன் செனவிரத்ன

இம்முறை எவ்வளவு அழகானதொரு வரவு செலவுத்திட்டத்தை முன்வைத்தாலும் அதனை செயற்படுத்த முடியாதென தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம, நாடு மிகவும் மோசமான நிலைக்குச் சென்றுள்ளதாலேயே, நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் பொருள்களின் விலைகளை எவராலும் கட்டுப்படுத்த முடியாமல் உள்ளது என்றார்.

தொடர்ச்சி P2

## முண்டாஸ் படுகொலையின் பிரதான சந்தேகநபர் சிக்கினார்



சப்புகஸ்கந்த மாபிம வீதியில் குப்பைத் தொட்டியிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட மாளிகாவத்தையைச் சேர்ந்த 44 வயதான பாத்திமா முண்டாஸ் படுகொலை தொடர்பில், பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

படுகொலை செய்யப்பட்ட பெண் அணிந்திருந்த தங்க ஆபரணங்கள், வைத்திருந்த பணம், படுகொலை செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட உலக்கை,

தொடர்ச்சி P2

### இனப்பரம்பலை மாற்ற எடுக்கும் முயற்சிக்கு எதிராக

## மாபெரும் போராட்டத்துக்கு அழைப்பு

■ க. அகரன்

வவுனியா மாவட்டத்தின் இனப்பரம்பலை மாற்ற எடுக்கும் முயற்சிக்கெதிராக, மாபெரும் போராட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக, வவுனியா வடக்கு பிரதேச சபை தவிசாளர் தணிகாசலம் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், எதிர்வரும் 15ஆம் திகதி, காலை 10 மணியளவில், நெடுங்கேணி நகரில், இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## நாட்டிலிருந்து பணம் அனுப்புதல் ஏற்றுமதி விதிக்கு உட்படாது



ஏற்றுமதி வருமானத்தை கட்டாயமாக மாற்றுவது தொடர்பான இலங்கை மத்திய வங்கியின் விதிக்கு, இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு பணம் அனுப்பப்படுதல் உட்படாது என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால், நேற்று (09) உறுதிப்படுத்தினார்.

தனது டுவிட்டர் பக்கத்தில் மேற்கண்ட விடயத்தை பதிவிட்ட அவர், அவ்வாறு அனுப்பப்படும் பணம் சேவை ஏற்றுமதியாக கருதப்படாது எனவும் விளக்கமளித்துள்ளார்.

தொடர்ச்சி P2

### வெளிநாடு செல்ல முயன்றோர்களில்

## சிலாபத்தில் 19 பேர் சிக்கினர்



சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக வெளிநாடு செல்ல முயன்ற 4 சிறுவர்கள் உட்பட 19 பேர், இலங்கை கடற்படையினரால் சிலாபம் முகத்துவாரத்தில் வைத்து நேற்று (09) கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படையினரால், சிலாபம் கடற்பகுதியில் நேற்று (09) காலை மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே, 19 பேர் சிலாபம் முகத்துவாரத்தில் வைத்து கைது செய்யப்பட்டதுடன், வேன் ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வத்தளை, மட்டக்களப்பு, திருகோணமலை,

தொடர்ச்சி P2

### உரிமையை பெற்றுத்தருவதாக கூறியவர்கள்

## மரபுரிமைகளைக் கூடப் பெற்றுத்தர முடியாதவர்களாக உள்ளனர்

■ எஸ் தில்லைநாதன்



தமிழர்களுடைய உரிமைகளைப் பெற்றுத் தருகிறோம் என்று கூறியவர்கள், இன்று எங்களுடைய மரபுரிமைகளைக் கூடப் பெற்றுத்தர முடியாதவர்களாக உள்ளனர் என, பாராளுமன்ற உறுப்பினரும் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

அண்மையில், மண்ணித்தலை சிவன் ஆலயத்தை பாதுகாப்பதற்கான வேலைத்திட்டத்தினை ஆரம்பித்து வைத்ததன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே,

தொடர்ச்சி P2

### ஹப்புத்தளை, பண்டாரவளையில்

## மாணவர்கள், சிறார்கள் 40 பேருக்கு கொரோனா

■ எம். செல்வராஜா

ஹப்புத்தளை பொதுச் சுகாதார சேவைப் பிரிவுக்குள் பாடசாலை மாணவர்கள் எட்டுப் பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என, பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் புபுது கருணாதிலக்க தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் அறிக்கை நேற்று (9) வெளியாகின. இதன்போதே, எட்டு மாணவர்களுக்குத் தொற்று உறுதியாகியிருப்பது தெரியவந்துள்ளது.

ஹப்புத்தளை பொது சுகாதார பிரிவைச் சேர்ந்த தியத்தலாவையில் உள்ள இரண்டு பாடசாலைகளில் எட்டு மாணவர்களே தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன்,

தொடர்ச்சி P2

## எரிபொருள் தீர்மானம் பசிலிடம் ஒப்படைப்பு



எரிபொருள் விலைகள் தொடர்பான இறுதித் தீர்மானம் நிதி அமைச்சர் பசில் ராஜபக்‌ஷவிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளதாக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நேற்று (09) காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## முதியவர்கள் மீது திடீர் அனுதாபம்



தற்போதைய அரசாங்கத்துக்கு முதியவர்கள் மீது திடீரென அனுதாபம் வந்துள்ளமை ஆச்சரியமளிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ஓய்வூதியத்தில் இருந்து அக்ரஹார காப்புறுதிக்காக குறிப்பிட்ட தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் தொடர்பிலேயே மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (09) காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது,

தொடர்ச்சி P2

### கைதடியில் விபத்து:

## 10 பேர் காயம்

■ எஸ். நிதர்ஷன்



கொழும்புத்துறையில் இருந்து பளை நோக்கி பயணித்த டொல்பின் ரக வாகனம் ஒன்று, மழையால் கட்டுப்பாட்டை இழந்து குடை சாய்ந்து விபத்துக்குள்ளானது.

இவ்விபத்து, நேற்று (09) காலை சம்பவித்துள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## நாட்டிலிருந்து பணம் அனுப்புதல் ஏற்றுமதி விதிக்கு உட்படாது



தற்போதைய பரிவர்த்தனைகள், அங்கீகரிக்கப்பட்ட அந்நியச் செலாவணியில் மீள வாங்குதல், கடன் சேவைச் செலவுகள், பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்குதல் மற்றும் இலங்கை அபிவிருத்திப் பத்திரங்களில் முதலீடுகள் ஏற்றுமதி வருமானத்தை ரூபாயாக மாற்றுவதற்கு முன்னர் வெளியிடப்பட்ட விதியின் கீழ் மத்திய வங்கியின் மூலம் வெளிச்செல்ல அனுமதிக்கப்படுகிறது.

ஏற்றுமதி வருமானம் மத்திய வங்கி வழங்கிய 25% கட்டாய மாற்ற விதிக்கு உட்பட்டது அல்ல என்றும் மாறாக, அனுமதிக்கப்பட்ட பற்று அனுமதிக்கப்பட்ட பின்னர், மீதமுள்ள தொகையை ரூபாயாக மாற்ற வேண்டும் என்றும் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## மரபுரிமைகளைக் கூடப் பெற்றுத்தர முடியாதவர்களாக உள்ளனர்



அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், நீண்ட காலமாக தமது மக்கள் ஏங்கிக் காத்திருந்த விடயம் தற்போது நிறைவேறி உள்ளது.

அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவால், வடக்கில் உள்ள தொல்பொருள் சின்னங்கள், மரபுரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதற்குரிய முதற்கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் கூறினார்.

நாம் இந்த விடயங்களைக் கேட்டது கடந்த நல்லாட்சி காலத்தில் தான். அப்போது, அவர்கள் தமிழர்களுடைய உரிமைகளைப் பெற்றுத் தருகிறோம் என்று கூறினார்கள். ஆனால், இன்று எங்களுடைய மரபுரிமைகளைக் கூட பெற்றுக்கொடுக்க முடியாதவர்களாக உள்ளனர் எனவும், அவர் தெரிவித்தார்.

ஆனால், இன்று நாம் எதிர்பார்க்காத ஓர் அரசாங்கம் எங்கள் மரபுரிமைகளையும் தொல்பொருள் சின்னங்களையும் பேணிப் பாதுகாக்கின்றது எனவும் அமைச்சர் நேரடியாக வருகை தந்து, இந்து கோவில்களை நிர்மாணிக்க நடவடிக்கை எடுத்திருப்பது முன்னேற்றகரமான செயற்பாடாக காணப்படுகின்றது எனவும், அவர் தெரிவித்தார்.

## முதியவர்கள் மீது திடீர் அனுதாபம்



ஒரு மாதத்துக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையைக் கொண்டு ஒருவரால் கூட வாழ முடியாது என்றும் சில இடங்களில் அந்தத் தொகையைக் கொண்டே குடும்பங்கள் இயங்குவதாகவும் சுட்டிக்காட்டினார்.

அனேகமானோருக்கு 20,000 ரூபாயோ 30,000 ரூபாயோ கிடைக்கின்றது, அதில் 600 அல்லது 700 ரூபாயைப் பெறுவது என்பது அவர்களுக்குப் பெரிய தொகை என்று தெரிவித்த அவர், அந்தத் தொகையைக் கொண்டு மின் கட்டணத்தையாவது செலுத்திக்கொள்வர் என்றும் ஓய்வூதியத்துடன் விளையாடுவதை அரசாங்கம் நிறுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அரசாங்கம் எடுத்த தீர்மானத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதாக பொன்சேகா குறிப்பிட்டார்.



## 10 பேர் காயம்

இந்த விபத்தால், வாகனத்தில் பயணம் செய்த 10க்கும் மேற்பட்டோர் சிறு காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சிலாபத்தில் 19 பேர் சிக்கினர்

பொலன்னறுவை, நீர்கொழும்பு, கொச்சிக்கடை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தோரே கைதுசெய்ய ப்பட்டுள்ளனர்.

வேனின் சாரதி மற்றும் உதவியாளர் உட்பட 16 ஆண்கள், பெண் ஒருவர், மூன்று சிறுவர்கள் மற்றும் சிறுமி உட்பட 19 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த குழுவினர், கடல்மார்க்கமாக வெளிநாடுகளுக்கு சட்டவிரோதமாக இடம்பெயர முயற்சித்ததாகவும் தற்போதுள்ள சுகாதார வழிகாட்டுதல்களுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், மேலதிக விசாரணைகளை கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

கடல் வழியாக சட்டவிரோதமாக இடம்பெயர்வது உட்பட அனைத்து சட்டவிரோத நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்த கடற்படையானது நாட்டைச் சுற்றியுள்ள கரையோரப் பகுதிகளை உள்ளடக்கிய வழக்கமான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

சிலாபம் கரையோரப் பகுதியில் விசேட தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், சிலாபம் முகத்துவாரத்துக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான் ஒன்றை சோதனையிட்ட போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

## மாணவர்கள், சிறார்கள் 40 பேருக்கு கொரோனா

பண்டாரவளை சிறுவர் காப்பகமொன்றில் ஐந்து வயது மற்றும் அதற்கு குறைவான வயதுகளைக் கொண்டு 27 சிறார்கள், தொற்றுக்குள்ளாகியுள்ளனர். மேலும் அக்காப்பகத்தில் பணியாளர்கள் ஐவருக்கும் தொற்று உறுதியாகியுள்ளது. அவ்வகையில் அக்காப்பகத்தில் மொத்தம் 32 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். என, பண்டாரவளை சுகாதார சேவை வைத்திய அதிகாரி டி.எம்.ஏ.ஆர். திசாநாயக்க கூறினார்.

இக்காப்பகத்தில் 52 பேருக்கு 'ரெபிட் அன்டிஜன்' பரிசோதனைகள் மேற்கொண்ட போது, அவர்களில் 32 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளமை தெரியவந்துள்ளது.

பாடசாலை மாணவர்கள் எட்டுப்பேரும், சிறுவர் காப்பகத்தில் 32 பேருமாக 40 பேரும் பொது சுகாதாரப் பரிசோதகர்களின் நேரடிக் கண்காணிப்புக்களுடன், 9 சிகிச்சை நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

## முண்டாஸ் படுகொலையின் பிரதான சந்தேகநபர் சிக்கினார்



சடலத்தை எடுத்துச் சென்ற ஓட்டோ உள்ளிட்டவையும் மீட்கப்பட்டுள்ளன என சப்புகஸ்கந்த பொலிஸார் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட கணவன்-மனைவி ஜோடியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர், அவர்கள் வழங்கிய வாக்குமூலத்தின் பிரகாரமே பிரதான சந்தேநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த பெண் அணிந்திருந்த நகைகளில் தங்க சங்கிலி, இரண்டு தோடுகள், தங்க மோதிரம் என்பன, சந்தேகநபரான பெண்ணினால், கொழும்பு செட்டியார் தெருவிலுள்ள தங்க நகைக்கடையில் 1 இலட்சத்து 69 ஆயிரத்துக்கு விற்றப்பட்டுள்ளது. அந்த நகைகள் யாவும் உருக்கப்பட்டுள்ளன. இந்நிலையிலேயே, இவை கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## மாபெரும் போராட்டத்துக்கு அழைப்பு

இதில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறும், அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

'இன்று, எமது பாரம்பரிய பிரதேசத்தில் சிங்கள மக்களை குடியேற்றும் செயற்பாடுகள் தொடர்சியாக நடைபெற்று கொண்டிருக்கும் வேளையில், அநுராதபுர மாவட்டத்தில் உள்ள மூன்று கிராமசேவையாளர் பிரிவுகளையும் வவுனியா மாவட்டத்துடன் இணைப்பதற்கான வேலைத்திட்டமானது, எந்தவித கலந்துரையாடலுமின்றி பேரினவாதிகளால் மேற்கொள்ளப்படுகிறது.

இந்தச் செயற்பாடானது, மேலும் இனவிகிதாசாரத்தில் பாரிய மாற்றத்தை மிகத்துரித கதியில் நடைமுறைப்படுத்துவதற்கான ஓர் உத்தியாகவே நோக்க வேண்டியுள்ளது' எனவும், அவர் கூறினார்.

எனவே இனப்பரம்பலை மாற்றும் அரசாங்கத்தின் செயற்பாட்டை கண்டித்தும் உரம் மற்றும் களைநாசினிகள் இன்மை, ஆசிரியர்களின் சம்பளமுரன்பாடு தீர்க்கப்படாமை அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு , விலைவாசி உயர்வு போன்றவற்றை கண்டித்தும், இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுவுள்ளது எனவும், அவர் கூறினார்.

குறித்த போராட்டம், இன்று (10) இடம்பெற இருந்த போதிலும், காலநிலையை கருத்தில் கொண்டு மாற்றப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## எரிபொருள் தீர்மானம் பசிலிடம் ஒப்படைப்பு

இதேவேளை, எரிவாயு விலை அதிகரிப்புடன் மண்ணெண்ணெய் பாவனைக்கு மக்கள் அதிக நாட்டம் கொண்டுள்ளதால் இந்நாட்களில் நாளாந்தம் 550 லீற்றர் மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு லீற்றர் டீசல் 111 ரூபாய்க்கு விற்கப்படுகின்ற நிலையில், ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 77 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதால் தொழிற்சாலைகள் மற்றும் பஸ் வண்டிகளிலும் டீசல் பயன்படுத்தப்படுவதாகச் சுட்டிக்காட்டினார்.

விவசாயம் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகள் இடம்பெறாத பிரதேசங்களில் மண்ணெண்ணெய் கொள்வனவு செய்வதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

## தயார் நிலையில் விமானப்படை

அதற்கமைய, அனர்த்த நிலைமையை கண்காணிப்பதற்காக விமானப்படை எண் 3 பீச் கிராஃப்ட் 200 சீனக்குடா விமானப்படை தளத்தில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

பெல் 212 ஹெலிகொப்டர், பெல் 412 ஹெலிகொப்டர் மற்றும் எம்ஐ 17 ஹெலிகொப்டர் ஆகியவை அவசர கால நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்காக இரத்மலானை விமானப்படை தளத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

ஹிங்குராங்கொடை விமானப்படை தளத்தில் இரண்டு பெல் 212 ஹெலிகொப்டர்கள் மற்றும் பலாலி விமானப்படை தளத்தில் ஒரு பெல் 212 ஹெலிகொப்டர் ஆகியவை நிறுத்தப்பட்டுள்ளன.

அநுராதபுரம் விமானப்படை தளத்தில் எம்ஐ-17 ஹெலிகொப்டர், வீரவில விமானப்படை தளத்தில் எம்ஐ-17 ஹெலிகொப்டர் மற்றும் அம்பாறை விமானப்படை தளத்தில் வை 12 விமானம் ஆகியவையும் நிலை நிறுத்தப்பட்டுள்ளன.

அனைத்து விமானப்படை தளங்களிலும் மீட்பு நடவடிக்கைகளுக்காக சிறப்பு பயிற்சி பெற்ற விமானப்படையின் சிறப்புப் படை வீரர்கள் மற்றும் நிவாரண நடவடிக்கைகளுக்கு விமானப்படை உறுப்பினர்களும் தற்போது தயார் நிலையில் உள்ளனர் என்று தெரியவருகிறது.

## "வாக்களித்த மக்களை ஏமாற்றமாட்டேன்"

ஜீவன் தொண்டமானின் 27வது பிறந்த தினம் நேற்றாகும். அதனையொட்டி, பொகவந்தலாவ ஸ்ரீ தண்டாயுதபாணி கோவிலில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. அதன்பின்னர், இடம்பெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

"எமக்கு அளித்த வாக்குகள் ஒரு போதும் வீணாகாது. மலையகத்தில் பாரிய மாற்றங்களை கொண்டுவர வேண்டுமென நான் நினைத்தேன். என்னால் முடிந்த மாற்றத்தை மாத்திரம் கொண்டுவர முடிந்தது. நான் ஒரு செங்கல்லை கூட நாட்டவில்லை என என் மீது குற்றம் சுமத்தினார்கள். கடந்த ஆட்சியில் உள்ளவர்கள். வைக்கவேண்டிய செங்கல்லை முறையாக வைத்திருந்தால் என்னால் முழுமையான வீட்டுத்திட்டத்தை முன்னெடுத்திருக்க முடியும்.

"இந்த அரசாங்கத்தில் நான் இணைந்துள்ளது கடந்த அரசாங்கத்தை விட ஒரு வீட்டையேனும் அதிகமாக கட்ட வேண்டும் என்பதற்கு அல்ல. அவர்கள் விட்டுச் சென்ற குறைகளை நான் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காகவே. நான் பெருமைப்படுகின்றேன். ஐந்து வருடங்களில் செய்து முடிக்கவேண்டிய வேலைத்திட்டத்தினை நான் ஒரு வருடகாலப் பகுதியில் முடித்துக் காட்டியிருக்கின்றேன்.

இன்று எவரிடமும் காணி உரிமை கிடையாது. மலையகத்தில் மாத்திரம் 15 ஆயிரம் தற்காலிக கூடாரங்கள் காணப்படுகின்றன. ஒரு முறையான முறையினை கையாண்டு இருந்திருந்தால் இன்று மலையகத்தில் தற்காலிக கூடாரங்கள் இல்லாது போயிருக்கும். இன்று சுயதொழில் செய்தால் மாத்திரமே தான் பொருளாதாரத்தில் நாம் வீழ்ச்சியடையாமல் வாழ முடியும் என்றார்.

## பயணம் தோற்றுவிட்டதால் மாற்றமே தேவையாகும்

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இந்த அரசாங்கத்தின் பயணம் தோல்வியடைந்துள்ளதால், எதிர்காலத்தில் அரசியலில் மாற்றம் செய்ய வேண்டும். புதிய அரசியலமைப்பு, புதிய கொள்கையின் கீழ், நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டுமாயின், தற்போதைய அரசாங்கத்தை மாற்ற வேண்டும்.

இந்த அரசாங்கத்தின் தோல்வியடைந்த பொருளாதார கொள்கைகளால்தான், பொருள்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து செல்கின்றது என்றார்.

தான் 10 வருடங்கள், மஹிந்த ராஜபக்ஷ வின் அரசாங்கத்தில் அமைச்சரவை அமைச்சராக கடமையாற்றியுள்ளதாகத் தெரிவித்த அவர், நல்லாட்சியிலோ 52 நாள்கள் அரசாங்கத்திலோ தான் அங்கம் வகிக்கவில்லை என்றார்.

அதேப்போல் இந்த ஜனாதிபதியால், அவரது ஜனாதிபதி பதவியை நாட்டின் முன்னேற்றத்துக்காக கொண்டு செல்ல முடியாது என்பதை தான் முன்னேரே அறிந்திருந்தேன் என்றார்.

எனவே,2024ஆம் ஆண்டு இந்த நாட்டை நேசிக்கும் நிறைவேற்று ஜனாதிபதிக்கான அதிகாரத்தை குறைக்கக் கூடிய ஜனாதிபதி ஒருவர் உருவாவார்.

## காணாமல் போன சிறுமிகள் மூவரையும் தேடி வேட்டை



கொழும்பு- புதுக்கடையைச் சேர்ந்த மூன்று சிறுமிகள், கடந்த 8ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாக அவர்களது உறவினர்கள், செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் அந்த மூன்று சிறுமிகளையும் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என வாழைத்தோட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

13 வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்ட சிறுமிகளே இவ்வாறு காணாமல் போயுள்ளனர். இந்த மூன்று சிறுமிகளும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இதேவேளை, இந்த மூன்று சிறுமிகளையும் திங்கட்கிழமை இரவு 8.10க்கும், 9.30 மணிக்கும் இடையில், ராஜகிரிய பிரதேசத்தில் கண்டதாக, அச்சிறுமிகளின் குடும்ப உறுப்பினர்களென தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட நபர், டுவிட்டர் பதிவொன்றை இட்டுள்ளார்.







## சூரசம்ஹாரம்

கொழும்பு-02 ஸ்ரீ சிவசுப்ரமணிய கோவிலில் சூரசம்ஹாரம், நேற்று (09) நடைபெற்றது. ( படங்கள்: நிஷால் பதுகே)

இயற்கையின் கோர தாண்டவத்தால்

# 12 பேர் பலி; 28,263 பேர் பாதிப்பு

நாட்டில், கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம், மின்னல், காற்றுடன் கூடிய சீரற்ற வானிலை காரணமாக இதுவரை 12 பேர் உயிரிழந்துள்ளதுடன், 17 மாவட்டங்களிலுள்ள 7,529 குடும்பங்களைச் சேர்ந்த 28,263 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என, அனர்த்த முகாமைத்துவ நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

நீரில் மூழ்கி 6 பேரும் மண்சரிவு காரணமாக 4 பேரும் மின்னல் தாக்கத்தால் 2 பேரும் உயிரிழந்துள்ளனர் என அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

இடம்பெயர்ந்த 470 குடும்பங்களைச் சேர்ந்த 1,688 பேர் பாதுகாப்பான தங்குமிடங்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் (ஊடக) பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.



பதுளை, நுவரெலியா, மாத்தளை, கண்டி, முல்லைத்தீவு, கொழும்பு, திருகோணமலை, மன்னார், இரத்தினபுரி, களுத்துறை, புத்தளம், அநுராதபுரம், யாழ்ப்பாணம், காலி, கேகாலை, கிளிநொச்சி, குருநாகல் ஆகிய மாவட்டங்களே அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் 3,501 குடும்பங்களைச் சேர்ந்த 12,530 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அந்த மாவட்டங்களில் 13 வீடுகள் முற்றாக அழிந்துள்ளன. மேலும் 802 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மஹா ஓயா பெருக்கெடுத்து ஓடுவதால், குருநாகல் மாவட்டத்தின் பொல்கஹாவெல பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பல தாழ்வான பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

மேலும், களுகங்கை மில்லகந்த பகுதியிலும், ஜின் கங்கை பத்தேகம பகுதியிலும், நில்வள கங்கை தல்கஹகொட பகுதியிலும், அத்தனகல ஓயா துனமலை பகுதியிலும் ஆறுகள் பெருக்கெடுத்து ஓடுவதாகதத் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட செயலாளர்களின் உதவியுடன் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஏதேனும் அவசரநிலை ஏற்பட்டால், 117 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தை தொடர்பு கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடும் மழை காரணமாக கற்பிட்டி, பாலாவி பிரதேசத்தில் நள்ளிரவு வேளையில் சிக்கித் தவித்த 71 பேரை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

### கிரியுல்ல நகர் மூழ்கியது

மஹாஓயா பெருக்கெடுத்து கிரியுல்ல நகரமும் மூழ்கியுள்ளதால், கொழும்பு - குருநாகல் வழித்தட இலக்கம் 5 இன் போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அவ்வீதியூடாகப் பயணிப்போர் மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

### இன்றும் கடும் மழை பெய்யும்

இன்றைய தினமும், வடக்கு, வடமத்தி, வடமேல், மேல் மாகாணங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான கடும் மழை பெய்யக் கூடும் என, வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேற்குறிப்பிட்ட மகாணங்களுடன், மத்திய, சப்ரகமுவ மாகாணங்களின் பல பகுதிகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ எதிர்பார்க்கப்படுவதாக அறிவித்துள்ள திணைக்களம், மணித்தியாலத்துக்கு 40 - 50 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக் கூடும் என்றும் எதிர்வு கூறியுள்ளது.



### மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம்

தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் அடுத்த 12 மணித்தியாலங்களில் தாழமுக்கப் பிரதேசம் விருத்தியடையக் கூடிய சாத்தியம் அதிகமாகக் காணப்படுவதால், இன்று (நேற்று) இரவில் இருந்து மறு அறிவித்தல் வரை நாட்டைச் சுற்றியுள்ள ஆழமான மற்றும் ஆழமற்ற கடற்பகுதிகளிலும், தென்மேற்கு வங்காள விரிகுடாவிலும்



மரணமடைந்த தாதி

மீன்பிடி, கடற்படை நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்க்குமாறு ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

மேலும், இவ்விடயம் குறித்து வழங்கப்படும் எதிர்கால வானிலை முன்னறிவிப்புகள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொண்டுள்ள திணைக்களம், நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று அறிவித்துள்ளது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாக காணப்படும். இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலத்த காற்று வீசுவதுடன் கடல் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது மேற்கு முதல் வடமேற்கு வரையான திசைகளிலிருந்து வீசக்கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும் என்றும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 55-65 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

### ரம்புக்கனையில் மூவர் பலி

கேகாலை மாவட்டத்தின் ரம்புக்கனை, உடகலதெனிய பகுதியில் நேற்று (09) ஏற்பட்ட மண்சரிவில் சிக்குண்டு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் காயமடைந்து கேகாலை வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாயாரான சுரங்கனி லக்ஷிகா (36), மகள் கசுனி மாரசிங்க (08), உறவினரான மதுஷிகா (13) ஆகியோரே உயிரிழந்துள்ளனர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

காயமடைந்த தந்தை, கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

வீட்டின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதுடன், படையினரும் நிவாரணக் குழுக்களும் சம்பவ இடத்துக்கு விரைந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

### மண்சரிவில் தாதி மரணம்

குருநாகல் மாவட்டத்தின் நாரம்மல, வென்னெருவ பகுதியிலுள்ள வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில், கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் தாதியாக கடமையாற்றும் 23 வயதான யுவதி மரணமடைந்துள்ளார்.

கடும் மழை காரணமாக நேற்று (09) அதிகாலை 1.00 மணியளவில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது

மண்சரிவுக்குள் சிக்கி காயமடைந்த மகள், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதுடன், வீட்டிலிருந்த அவரின் தாய், சகோதரி ஆகிய இருவரும் சிறு காயங்களுடன், உயிர் தப்பியுள்ளனர்.

### பல இடங்களில் மின் தடை

சீரற்ற வானிலை காரணமாக பல பிரதேசங்களில் மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளது என்று மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று (09) காலை வரையான காலப் பகுதியில் சுமார் 220,000 மின் பாவனையாளர்களுக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சின் ஊடகப் பணிப்பாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்தார்.

தென் மாகாணத்தின் சில பகுதிகளிலும் மத்திய, கிழக்கு, சப்ரகமுவ, மேல் மாகாணங்களில் சில பகுதிகளிலும் இந்த நிலைமை காணப்படுவதாகச் சுட்டிக்காட்டினார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மின் விநியோகத்தை சீரமைக்கும் பணிகளுக்கு பணிக்குழுக்கள் குறிப்பிட்ட பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

### யாழ். அரச பாடசாலைகளுக்கு பூட்டு

யாழ்ப்பாணத்தில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக அனைத்து அரச பாடசாலைகளும் இன்று மூடப்படும் என யாழ். மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பகுதியில் 200 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை பெய்ததையடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்டச் செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.



### கிளிநொச்சி பாடசாலைகளுக்கும் பூட்டு

தற்போது நிலவுகின்ற வானிலை காரணமாக கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கு இன்று (10) விடுமுறை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சீரற்ற வானிலை காரணமாக கடுமையாக மழை பெய்து வருவதால் மாணவர்களின் பாதுகாப்பு கருதி இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும், நிலவுகின்ற வானிலையை பொறுத்தே விடுமுறையை நீடிப்பதா இல்லை என்பது பின்னர் தீர்மானிக்கப்படும் எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

### மண்சரிவு அபாய எச்சரிக்கை

பதுளை, காலி, களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை, இரத்தினபுரி மாவட்டங்களில் பல பகுதிகளுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கையும் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

---

பக்டீரியா சேதன உரம்;

## மக்கள் வங்கிக்கான தடை உத்தரவு நீடிப்பு



பக்டீரியா உள்ளடங்கியுள்ளதாக உறுதி செய்யப்பட்ட சேதன உரத் தொகையை இலங்கைக்கு எடுத்து வந்ததாக கூறப்படும் சீன நிறுவனத்துக்கு அதன் உள்நாட்டு முகவர் பணம் செலுத்துவதைத் தடுத்து நிறுத்துமாறு மக்கள் வங்கிக்கு விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவை கொழும்பு வர்த்தக நீதிமன்றம் நீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த தடை உத்தரவு இம்மாதம் 19 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு வர்த்தக நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம் தாக்கல் செய்த மனு நேற்று (09) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

---

## 'மிருதங்க சங்கீர்த்தனி' நூல் வெளியீட்டு விழா

நீ.கிரிதரன் சர்மா எழுதிய 'மிருதங்க சங்கீர்த்தனி' எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு கொழும்பு தமிழ் சங்கத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (14) மாலை 4.00 மணிக்கு 'சங்கீத வித்துவான்' ஏ.கே. கருணாகரன் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

இந்நூலின் முதல் பிரதியை புரவலர் புத்தகப் பூங்கா நிறுவனர் ஹாசீம் உமர் பெற்று கொள்வார்.

இந்நிகழ்வில், ஆசியுரையை பிரதமரின் இந்து மத விவகார இணைப்பாளர் டொக்டர் சிவஸ்ரீ இராமச் சந்திர குருக்களும், வாழ்த்துரையை வயலின் வித்துவான் கலாநிதி சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்களும், நாட்டிய கலாமந்திர இயக்குநர் கலாசூரி திருமதி வாசுகி ஜெகதீஸ்வரன், சங்கீத ஆசிரிய ஆலோசகர் இசைக் கலைமணி திருமதி கலாராணி ஸ்ரீஸ்கந்தராஜா, சங்கீத வித்துவான் ஏ.கே கருணாகரன், ஆகியோரும் நிகழ்த்துவார்கள்.

அத்துடன் சிறப்புரையை டொக்டர் அரூரன் அருனந்தி, கலாநிதி சியாமளாங்கி கருணாகரன், மிருதங்க கலாகீர்த்தி பிரம்மஸ்ரீ க. சுவாமிநாதன் சர்மா, ரட்னம் ரட்னதுரை, வை வேனிலான், வெளியீட்டுரையை நல்லை க கண்ணதாசன், நிகழ்த்துவார்கள். அத்துடன் பூபாலசிங்கம் புத்தகசாலை உரிமையாளர் பூ.ஸ்ரீகரசிங் கௌரவிப்பு நிகழ்வும் நடைபெறும்.

---

காரணம் அறியப்படாத சிறுநீரக நோய்:

## சுகாதார அமைச்சின் முறையற்ற செயற்பாடா?

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

தற்போது கொரோனா தொற்றானது நாட்டு மக்களைத் தாக்குகின்ற நேரத்தில்,தொற்று நோய்களின் தாக்கமும் நாட்டில் அதிகரித்துள்ளன என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகக் குழு மற்றும் மத்திய குழு உறுப்பினரான வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில், தொற்று நோயை முகாமைத்துவம் செய்வது சுகாதார அமைச்சின் பொறுப்பாக இருக்கின்ற போதும் தொற்றா நோயை முகாமைத்துவம் செய்வதும் சுகாதார அமைச்சின் பொறுப்பாகும் எனவும் தெரிவித்தார்.

காரணம் அறியப்படாத சிறுநீர நோய் தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெளிவான பரிந்துரைகளை அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளன. ஆகவே, தொற்றா நோயைக் கட்டுபடுத்துவது தொடர்பில் நாம் எமது முன்மொழிவுகளை வைத்துள்ளோம். குறிப்பாக 2013ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கட்டுப்படுத்துவதற்காக 12 முன்மொழிவுகளை வைத்துள்ளோம் என்றார்.

> தொற்றா நோய் தொடர்பில் விழிப்புணர்வு, காரணம் அறியப்படாத நீண்ட கால சிறுநீரக நோய் தொடர்பில் சுகாதார அமைச்சு சரியான முறையில் செயற்படவில்லை

ஆனால், தொற்றா நோய் தொடர்பில் விழிப்புணர்வு, காரணம் அறியப்படாத நீண்ட கால சிறுநீரக நோய் தொடர்பில் சுகாதார அமைச்சு சரியான முறையில் செயற்படவில்லை. இந்த விடயம் தொடர்பில் விரைந்து சிறந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுக்கின்றது என்றார்.

எனவே , இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு,ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. எனவே, தொற்று நோய் முகாமைத்துவம் சரியான முறையில் செயற்படுத்தப்பட்டதைப் போன்று, தொற்றா நோய் தொடர்பிலும் சிறந்த நடவடிக்கை எடுக்கப்படுமாயின் ஓர் ஆரோக்கியமான, வினைத் திறனான சுகாதார பொறிமுறையை நாட்டு மக்களுக்காக உருவாக்க முடியும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் உறுதியாக நம்புகிறது என்றார்.

---

## கட்டணம் அறவிட முயற்சிப்பதை அனுமதிக்க முடியாது

### ஓய்வூதியர் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய இயக்கம்

அஸ்லம் எஸ்.மௌலானா

2016 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள, அக்ரஹார காப்புறுதித் திட்டத்துக்கு ஓய்வூதியத்தில் இருந்து அங்கத்துவப் பணம் அறவிடப்படும் பொது நிருவாக சுற்றறிக்கையினை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டுமென ஓய்வூதியர்களின் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இக்கோரிக்கை அடங்கிய மகஜர் மேற்படி தேசிய இயக்கத்தின் உறுப்பினர்களால் பொது நிர்வாக அமைச்சு செயலாளரிடம் நேரில் கையளிக்கப்பட்டதாக அதன் உப தலைவரும் ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளருமான ஏ.எல்.எம். முக்தார் நேற்று (09) தெரிவித்தார்.

> ஓய்வூதியர்கள் மீது அரசுக்கு அக்கறை இருக்குமாயின் அவர்களுக்கு இலவச காப்புறுதி வழங்குவதே அவர்களது சேவைக்கு வழங்கப்படும் அங்கிகாரமாகும்

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்; நாட்டுக்காக தம்மை 30, 40 வருடங்களாக அர்ப்பணித்து கடமை புரிந்த அரச துறை ஓய்வூதியர்களிடமிருந்து காப்புறுதி பணம் என்ற போர்வையில் ரூபா 400 முதல் 600 வரை இந்த இக்கட்டான சூழ்நிலையில் அறவிட எடுக்கப்படும் முயற்சிகளை எவ்வகையிலும் அனுமதிக்க முடியாது.

உண்மையில் ஓய்வூதியர்கள் மீது அரசுக்கு அக்கறை இருக்குமாயின் அவர்களுக்கு இலவச காப்புறுதி வழங்குவதே அவர்களது சேவைக்கு வழங்கப்படும் அங்கிகாரமாகும். அதை விடுத்து அவர்கள் பெறுகின்ற குறைந்த ஓய்வூதியத்தில் பணம் அறவிட முற்படுவது அவர்களுக்கு வழங்கப்படும் 'சிரேஷ்ட பிரஜைகள்' என்ற அந்தஸ்தை கேலி பண்ணும் செயற்பாடாகவே அமையும்.

இந்த அரசங்கம் பதவிக்கு வந்த நாள் முதல் ஓய்வூதியர்களை குறிவைத்துத் தாக்குகிறது. எதிர்காலத்தில் ஓய்வூதியத்தினை நிறுத்தி விடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றதா எனவும் சந்தேகிக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

---



## மட்டுப்படுத்தப்பட்ட ரயில் சேவைகள்

சீரற்ற வானிலை காரணமாக பிரதான ரயில் பாதையில், ரயில் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர நேற்று (09) ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

மேலும், சீரற்ற வானிலை காரணமாக, கொழும்பு கோட்டையில் இருந்து ரம்புக்கணை வரையும், கொழும்பு கோட்டையில் இருந்து சிலாபம் வரையுமான பிரதான ரயில் பாதையில் ரயில் சேவைகள் இடம்பெறும் என ரயில்வே பொது முகாமையாளர் தெரிவித்தார்.

இதேவேளை மலையக ரயில் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

---


### அட்டர்னியின் சக்தியை நீக்குதல்

இலங்கை குடியரசின் தென் மாகாணத்தின் காலி மாவட்டத்தில் உள்ள இலக்கம் 254, ஒல்காட் மாவத்தை, காலி என்ற முகவரியில் உள்ள தேசிய அடையாள அட்டை இலக்கம் 812233688V என்ற தேசிய அடையாள அட்டையை உடைய அப்துல் வக்கீல் முஷ்தாக் ஹமீத் நான், இலங்கை அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கிறேன். யேல் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் மேனேஜ்மெண்ட் லங்கா (தனியார்) நிறுவனத்திற்கும் நான் பரிந்துரைத்துள்ளேன் இலங்கையில் 2007 ஆண்டின் கம்பனிகள் சட்டம் இல. 07 இன் கீழ் இலங்கைக் குடியரசின் கண்டி மத்திய மாகாணத்தில் உள்ள எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08, இல. சட்டபூர்வ வழக்கறிஞர் எனவே இனிமேல் நான் கூறப்பட்ட வழக்கறிஞரால் சட்டப்பூர்வ அல்லது வேறுவிதமாகச் செய்யப்படும் எந்தவொரு விஷயத்திற்கும் நான் பொறுப்பு மற்றது அல்லது பொறுப்பேற்க மாட்டேன்

அப்துல் வக்கீல் முஷ்தாக் ஹமீத்

### வழக்கறிஞரின் அதிகாரத்தை ரத்து செய்தல்

நான் மொஹமட் இக்பால் பாத்திமா ஃபர்வீன் இலங்கை குடியரசின் காலி தென் மாகாணத்தின் காலி மாவட்டத்தில் உள்ள மொக் லேன் கட்டுகொட இலக்கம் 15/11 என்ற இலக்கம் 837570956V என்ற தேசிய அடையாள அட்டையை வைத்திருப்பர் இதன் மூலம் இலங்கை அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் தெரிக்கிறேன். யேல் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் மேனேஜ்மெண்ட் லங்கா (தனியார்) நிறுவனத்தை நியமித்து ஏ.டபிள்யூ.எம்.ஆர்.டி.ரத்வத்தை நோட்டரி பப்ளிக் கம்பளை சான்றளித்து 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் 18 ஆம் தேதியன்று 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் 2790 ஆம் ஆண்டுக்கான விசேட சட்டப்பூர்வ அதிகாரத்தை நான் இரத்து செய்து ரத்து செய்துள்ளேன். 2007 ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டம் இல. 07 இன் கீழ் இலங்கையில் முறையாக இணைக்கப்பட்ட நிறுவனம் இலங்கை குடியரசின் கண்டி மத்திய மாகாணத்தில் கொழும்பு 08 எல்விடிகல மாவத்தை கொழும்பு 08 என்ற முகவரியில் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தை கொண்ட சான்றிதழ் இலக்கம் 100278 இன் கீழ் எனது உண்மையான மற்றும் சட்டபூர்வமான வழக்கறிஞர் எனவே இனிமேல் நான் கூறப்பட்ட வழக்கறிஞரால் சட்டப்பூர்வ அல்லது வேறு எந்த விஷயத்திற்கும் நான் பொறுப்பு மற்றது அல்லது பொறுப்பேற்க மாட்டேன்

மொஹமட் இக்பால் பாத்திமா ஃபர்வீன்

அடைமழையால்

# தத்தளிக்கிறது வடக்கு

நாட்டில் தொடர்ந்து அடைமழையுடனான வானிலை தொடர்ந்த வண்ணமுள்ள நிலையில், வடக்கின் பல பாகங்களிலும், நேற்று (09) வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதுடன், குளங்களின் நீர் மட்டமும் அதிகரித்து வான்பாய ஆரம்பித்துள்ளன.

இதனால், வடக்கில் கணிசமானோர் இடம்பெயர்ந்துள்ள அதேவேளை, மக்களின் இயல்புநிலை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், மழைக் காலங்களில் தொற்று நோய்கள் ஏற்படக் கூடிய நிலைமையும் காணப்படுகின்றது.














நீர் நிலைகளுக்கான நீர்வருகை தொடர்ந்தும் காணப்படும் நிலையில், மழை பெய்யும் சார்த்தியக்கூறுகள் தொடர்ந்தும் இருப்பது தொடர்பில் வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. இந்நிலையில் மக்கள் தொடர்ந்தும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும், மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையங்கள் அறிவுறுத்தியுள்ளன.

மேலும், நீர்நிலைகள், நீர்வடிந்தோடும் பகுதிகளுக்கு செல்வதை தவிர்க்குமாறும், தாழ்நில பகுதிகளில் உள்ள மக்கள் தொடர்ந்தும் அவதானத்துடன் செயற்படுமாறும், அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இடர் ஏற்படும் சந்தர்ப்பங்களில் கிராம சேவையாளர் ஊடாக அல்லது, பாதுகாப்புத் தரப்பினர் ஊடாக பாதுகாப்பை பெற்றுக்கொள்ளுமாறும், இடர் முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

கூடுதலான வெள்ளப் பாதிப்புகள் ஏற்படுகின்ற போது முப்படையினரும் வெள்ளப் பாதிப்புகளில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### வெள்ளம்

கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் தொடர்ந்து அடை மழை பெய்து வருவதைத் தொடர்ந்து. வெள்ளம் வழிந்தோட வழியில்லாமல், அம்மாவட்டங்களின் பெரும்பாலான பகுதிகள் வெள்ளக் காடாக காட்சியளிக்கின்றன.

### குளம் வான்பாய்கிறது

பழையமுறிகண்டிக் குளம், கனகாம்பிகைக்குளம், வன்னேரிக்குளம் ஆகிய குளங்கள் நேற்று (09) காலையில் வான் பாயத் தொடங்கியுள்ளன. வல்வெட்டித்துறை ஊறிய ஊற்றும் பெருக்கெடுத்துப் பாய ஆரம்பித்துள்ளது.

### பலர் இடம்பெயர்வு

வவுனியாவில், நேற்று முன்தினம் (08) காலை 8.30 மணி முதல் நேற்று (09) காலை 8.30 மணிவரையில் நிறைவடைந்த 24 மணி நேர காலப்பகுதியில் 41.9 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக, வவுனியா வளிமண்டலவியல் திணைக்களத்தின் அவதானிப்பாளர் தா. சதானந்தன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மன்னார் மாவட்டத்தின் 3,501 குடும்பங்களைச் சேர்ந்த 12,350 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என, மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மாவட்ட உதவி பணிப்பாளர் கே.திலீபன் தெரிவித்தார்.

இவர்களில் 25 குடும்பங்களைச் சேர்ந்த 105 நபர்கள் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து 3 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 27 குடும்பங்களைச் சேர்ந்த 57 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரு சில குடும்பங்கள், உறவினர் வீடுகளில் தங்கியுள்ளன.

### மாணவர்களின் வருகை

கன மழையால் பாடசாலை செல்லும் மாணவர்கள் மிகவும் குறைந்தளவில், நேற்று பாடசாலை சென்றுள்ளதை அவதானிக்க முடிந்துள்ளது. நேற்றைய தினம் பாடசாலைகள் நடைபெற்றபோதிலும் மாணவர்களை நேர காலத்தோடு வீடுகளுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### போக்குவரத்து துண்டிக்கப்படும் அபாயம்

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள முக்கிய குளங்களான குடமுருட்டி, கரியாலைநாகபடுவான் குளங்கள் வான் பாய்கின்ற போது போக்குவரத்துகள் துண்டிக்கப்படுவதற்கான சூழல் உருவாகி வருகின்றது.

மேலும், வன்னேரிக்குளத்தின் வான் பாய்கின்ற போது ஜெயபுரத்திற்கும் வன்னேரிக்குளத்திற்கும் இடையிலான போக்குவரத்துகள் துண்டிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நடராசா கிருஸ்ணகுமார், எஸ். நிதர்ஷன், சுப்பிரமணியம் பாஸ்கரன், மு. தமிழ்ச்செல்வன், எஸ். தில்லைநாதன், றொசேரியன் லெம்பேட், க. அகரன், செ.கீதாஞ்சன்

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் வேலை நிறுத்தம்:

# தொற்றொழிப்பு ஸ்தம்பிதம்

■ வ.சக்தி, ரீ.எல்.ஜவ்பர்கான்

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, சுகாதார உத்தியோகத்தர் சம்மேளனம் ஏற்பாடு செய்த வேலை நிறுத்தத்தில், மட்டக்களப்பு மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் நேற்று (09) இணைந்தனர்.

இதனால் இம்மாவட்டத்தில் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் அலுவலகங்கள் யாவும் முற்றாக மூடப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 சுகாதார வைத்தியதிகாரி பிரிவுகளிலும் சுமார் 72 பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கடமை புரிகின்றனர்.



பொதுச் சுகாதார பரிசோதகர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் உட்பட கொரோனா விழிப்பூட்டல் மற்றும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் யாவும் மாவட்டத்தில் ஸ்தம்பித்தன.

இந்த வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக, இம்மாவட்டத்தில் அன்டிஜன், பி.சி.ஆர் நடவடிக்கைகளும் நேற்றையதினம் பாதிக்கப்பட்டன.

இதேவேளை, மாவட்டத்தில் ஏனைய சுகாதார ஊழியர்களும் பணிப் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# சஹ்ரான் மனைவியின் விளக்கமறியல் நீடிப்பு



■ வா.கிருஸ்ணா

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சஹ்ரானின் மனைவியான அப்துல் காதர் பாத்திமா ஹாதியாவை, டிசெம்பர் 13ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு, மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரானின் மனைவி தொடர்பான வழக்கு, மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில், நீதிபதி எம்.என்.அப்துல்லா தலைமையில் நேற்று முன்தினம் (08) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

> “ சஹ்ரானின் மனைவியான அப்துல் காதர் பாத்திமா ஹாதியாவை, டிசெம்பர் 13ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு, மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது

குறித்த வழக்கை, கல்முனை மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கான அனுமதியை வழங்கியதுடன், டிசெம்பர் 13ஆம் திகதி வரை விளக்கமறியலையும் நீடித்தார்.

பொலிஸார் படுகொலை;

## சந்தேகநபர்களுக்கு தொடர் விளக்கமறியல்

■ வா.கிருஸ்ணா

வவுணதீவில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் படுகொலை தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ளவர்களை, டிசெம்பர் 13ஆம் திகதி வரையில் தொடந்தும் விளக்கமறியில் வைக்குமாறு, மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.என்.அப்துல்லா உத்தரவிட்டார்.

29-11-2018அன்று வவுணதீவு, வலையிறவு காவலரணில் கடமையிலிருந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்தப் படுகொலை தொடர்பில் 2019 ஏப்ரல் மாதம் 27ஆம் திகதியன்று, தேசிய தௌஹீத் ஜமாஅத் அமைப்பின் தற்கொலைதாரி சஹ்ரான் ஹாஷிமினின் முக்கிய சகாக்களான சஹ்ரானின் சாரதியான முஹமது சரீப் ஆதம்பாலெப்பை கபூர் (வயது 54), கம்சா முகைதீன் இம்ரான் (வயது 31) முஹமது ஆசிம் சியாம் (வயது 34) உட்பட நான்கு பேர் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் தொடர்பான வழக்கு, சி.ஐ.டியினரால் முன்னெடுக்கப்பட்டு வந்தது. மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் நேற்று முன்தினம் (08) ஆஜர்படுத்த நிலையில் தொடர்ந்து அவர்களை, டிசெம்பர் 13ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைப்பதான உத்தரவைப் பிறப்பித்தார்.

# பதுக்கிய சீமெந்து மூடைகள் மீட்பு

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

காத்தான்குடியில் சீமெந்து மூடைகளை பதுக்கி வைத்திருந்து அதிக விலைக்கு விற்பனை செய்த சில வர்த்தக நிலையங்களை, நேற்று முன்தினம் (08) முற்றுகையிட்ட நுகர்வோர் அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட அதிகாரிகள், சுமார் 800க்கு மேற்பட்ட சீமெந்து மூடைகளை மீட்டுள்ளனர்.

அத்துடன், மீட்கப்பட்ட சீமெந்து மூடைகளை அதில் பொறிக்கப்பட்ட விலைக்கே அவ்விடத்திலேயே பொதுமக்களுக்கு விற்பனையும் செய்தனர்.

நுகர்வோர் அதிகார சபையின் கிழக்கு மாகாண உதவிப் பணிப்பாளர் ஆர்.எப். அன்வர் சதாத் தலைமையில், இந்த அதிரடி முற்றுகை நடவடிக்கை இடம்பெற்றது.



இதன்போது, சீமெந்து விற்பனை செய்யும் வர்த்தக நிலையமொன்று சீல் வைக்கப்பட்டு மூடப்பட்டதுடன், அதிக விலைக்கு சீமெந்து விற்பனை செய்த உரிமையாளர்கள் சிலருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் நுகர்வோர் அதிகார சபையின் கிழக்கு மாகாண உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

சீமெந்து மூட்டைகளை அதிக விலைக்கு விற்பனை செய்தால் உடனடியாக நுகர்வோர் அதிகார சபைக்கு அறியத்தருமாறும் அவர் மேலும் தெரிவித்தார்.



திருகோணமலை பொலிஸ்

## பொறுப்பதிகாரி பொறுப்பேற்றார்

■ எப்.முபாரக்

திருகோணமலை தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரியாக எச்.ஏ.எஸ்.கே.ஜயரத்தின தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார்.

பொலிஸ் திணைக்களத்தில் 21 வருட சேவையை நிறைவு செய்துள்ள ஜயரத்தின, அம்பாறை, மட்டக்களப்பு, குருநாகல், புத்தளம் பொலிஸ் விசேட அதிரடிப் படை பிரிவு போன்றவற்றில் கடமையாற்றியுள்ளார்.

திருகோணமலை தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்படுவதற்கு முன்னர் கொட்டாவெஹர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றியுள்ளார்.



## ‘தாமதித்து வாருங்கள்’

■ என்.ராஜ்

கனமழையின் தாக்கத்தால், யாழ். போதனா வைத்தியசாலைக்கு சாதாரண சிகிச்சை பெற வருவோர் சற்று தாமதமாக வருமாறு, யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெய்துவரும் கனமழை மற்றும் தாதியர்கள், துணை மருத்துவ சேவை உத்தியோகத்தர்களின் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தின் காரணமாக, யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின் கிளினிக் பிரிவு மற்றும் சாதாரண பிரிவுகளில் செயற்பாடு மந்த கதியில் இடம்பெற்று வருகின்றது என்றார்.

எனவே, பொதுமக்கள், சாதாரண சிகிச்சை பெற வருவோர் மழை முடிந்த பின்னர் வருகை தந்து, சிகிச்சையை பெற்றுக் கொள்ளுமாறும், பணிப்பாளர் அறிவித்துள்ளார்

எனினும், போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவு மற்றும் ஏனைய விசேட வைத்திய சேவைகள் அனைத்தும் இடம்பெறுவதாகவும் எனினும் சாதாரண சிகிச்சைகள் மாத்திரம் தற்போது மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

## நந்திக்கடல் உடைப்பெடுப்பு

■ நடராசா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு, நந்திக் கடலின் நீர் பெருங்கடலுடன் கலக்கத் தொடங்கி உள்ளதாக, முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியதாஸ் பிறொட்ரிக் ஜோன்சன் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், நள்ளிரவு முதல் இது இயற்கையாக நிகழ்ந்துள்ளது என்றார்.

நந்திக் கடலின் நீர் மட்டம் உயர்கின்ற போது முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தால் வட்டுவாகல் பகுதியில் மண் அகற்றப்பட்டு நந்திக் கடல் நீர் பெருங்கடலுடன் கலக்க விடுவது வழமை ஆகும் எனவும், அவர் தெரிவித்தார்.



ஆனால் நேற்று முன்தினம் (08), முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகரித்த மழை காரணமாக, நந்திக் கடல், நள்ளிரவு முதல் உடைப்பெடுத்து, பெருங்கடலுடன் நீர் கலந்து வருவதாக, அவர் மேலும் கூறினார்.

## குடிநீர் வழங்குவதில் சிக்கல்

■ மு.தமிழ்ச்செல்வன், சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சியில், அதிகரித்த மழை காரணமாக சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வழங்குவதில் தொடர்ந்தும் சிரமம் ஏற்படுவதாக, கிளிநொச்சி மாவட்ட நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி முல்லைத்தீவு பொறியியலாளர் எந்திரி எஸ். சாரங்கன் தெரிவித்தார்.

பெய்து வரும் அதிகரித்த மழை காரணமாக, கிளிநொச்சி குளத்துக்கு அதன் நீரேந்து பகுதிகளில் இருந்து அதிகளவான கலங்கிய நீர் வருவதனாலேயே, குடிநீருக்கான நீரை சுத்திகரித்து வழங்குவதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மட்டுப்படுத்தப்பட்ட குடி நீர் விநியோகமே மேற்கொள்ளப்படும் எனவும், அவர் கூறினார்.







## களத்தினருக்கு பூஸ்டர்...

மட்டக்களப்பு மாவட்டத்தில் முதற் களப் பணியாளர்களுக்கான பைசர் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இதன்படி, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியசாலை ஊழியர்களுக்கு பைசர் தடுப்பூசியின் பூஸ்டர் செலுத்தும் நடவடிக்கைகள், நேற்று (09) முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி கே. கலாரஞ்சனியின் மேற்பார்வையில், வைத்தியர்கள், தாதியர்கள் உள்ளிட்ட ஊழியங்களுக்கு இத்தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

(படங்கள்: வா. கிருஷ்ணா)

பாதிக்கப்பட்டுள்ள நுவரெலியா மாவட்ட

# விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குங்கள்

## இராதா எம்.பி வேண்டுகோள்

■ டி.ஷங்கீதன்

கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியாகப் பெய்து வரும் கடுமையான மழை காரணமாக, நுவரெலியா மாவட்ட விவசாயிகள் கோடிக் கணக்கான ரூபாய்களை இழந்திருக்கின்றார்கள் எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஸ்ணன், அடுத்த கட்டத்தை நோக்கி நகர முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் அவர்களை பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். எனவே, அவர்களுக்கு நிவாரணத்தை அல்லது நட்ட ஈட்டை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

கடந்த ஜனவரி மாதம் முதலே நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ச்சியாக மிகவும் சீரற்ற வானிலையே நிலவி வருகின்றது. இதன் காரணமாக நுவரெலியா மாவட்ட



விவசாயிகள் தங்களுடைய விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றார்கள்.

இவ்வாறான ஒரு நிலைமையில் அரசாங்கத்தின் சேதன பசளை அறிவிப்பு அவர்களை இன்னும் படு



குழியில் தள்ளிவிட்டுள்ளது. இதன் காரணமாக தங்களுடைய விவசாயத்திற்கு தேவையான பசளைகள் கிருமிநாசினிகள் போன்றவற்றை பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியதுடன். அவற்றுக்கான பெரும் தட்டுப்பாடும் நிலவியது.

ஒரு சில விவசாயிகள் கொரோனாவில் பெரும் பாதிப்பை சந்தித்த ஒரு இக்கட்டான நிலையில், கடந்த சில வாரங்களாக சீரற்ற மிகவும் மோசமான வானிலை நிலவுவதன் காரணமாக, விவசாயிகளின் விவசாய நிலங்களுக்குள் வெள்ள நீர் புகுந்து 75 சதவீதத்திற்கும் அதிகமான பயிர்களை அழித்துவிட்டது.

இதன் காரணமாக, விவசாயிகள் பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளதுடன், அடுத்த கட்டம் என்ன என்பதை புரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றார்கள். எனவே இவர்களின் இந்த நிலைமையை கருத்தில் கொண்டு விவசாய திணைக்களத்தின் மூலமாக சரியான தகவல்களை பெற்றுக் கொண்டு, பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரணங்களை அல்லது நட்ட ஈட்டை வழங்க அரசாங்கம் முன்வர வேண்டும் எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

அக்குறணையில் இருந்து வெளிநாடு செல்பவர்களுக்கு

# மொடர்னா தடுப்பூசி

அக்குறணை பிரதேசத்தில் வசிப்பவர்களில், வெளிநாடு செல்ல இருப்பவர்கள் பலரின் வேண்டுகோளுக்கு அமைய, மொடர்னா (Mordena) தடுப்பூசியை செலுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக, அக்குறணை பிரதேச சபை தவிசாளர் இஸ்திஹார் இமாதுதீன் நேற்று (09) தெரிவித்தார்

இவர்கள் தமக்கான முதல் தடுப்பூசியை இம்மாதம் நாளை (11) வியாழக்கிழமை அலவத்துக்கொடை தேசிய பாடசாலையில் மு.ப 7.00 மணி தொடக்கம் பெற்றுக்கொள்ள முடியும்.

வெளிநாடு செல்வதற்கு தடுப்பூசிகளை பெற எதிர்பார்த்து இருப்பவர்கள் இம்மாதம் 09ஆம் திகதி மற்றும் 10ஆம் திகதிகளில் காலை 9.00 மணி தொடக்கம் பகல் 2.00 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் அக்குறணை பிரதேச சபைக்கு நேரடியாக சென்று பதிவு செய்துகொள்ள வேண்டும்.

தடுப்பூசிகளை



பெறுவதற்கு பதிவு செய்ய வரும்பொழுது கடவுச் சீட்டு, தேசிய அடையாள அட்டை, விசா, (Passport copy, NIC copy, visa or appointment copy) ஆகிய ஆவணங்களை உடன் எடுத்து வருமாறும் வேண்டப்படுவதாகவும் மேலும் அவர் குறிப்பிட்டார்

தடுப்பூசிகளை பெறுவதற்காக முன்னதாக பதிவு செய்து டோக்கன் பெற்றவர்கள் மீண்டும் பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லை. அவர்கள் நேரடியாக 11 ஆம் திகதி வியாழக்கிழமை அலவத்துகொடை தேசிய பாடசாலையில் தமக்கான முதல் தடுப்பூசிகளை உரிய நேரத்தில் செலுத்திக்கொள்ள முடியும் என்றார்.

மாத்தளை மாவட்டத்தில் அவதானம்மிக்க

# 29 வீடுகளை

## அப்புறப்படுத்துமாறு கோரிக்கை

■ மஹேஸ் கீர்த்திரத்ன

சீரற்ற வானிலைக் காரணமாக, மாத்தளை மாவட்டத்தில் அதிக அவதானம்மிக்கதாக அடையாளம் காணப்பட்டுள்ள 29 வீடுகளை, குறித்த இடங்களிலிருந்து அப்புறப்படுத்துமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிலையத்தின் மாத்தளை அலுவலக பிரதானி சிரேஸ்ட புவியியல் நிபுணர் சமிந்த மொரேமட தெரிவித்துள்ளார்.

குறித்த 29 வீடுகளும் இரத்தொட்டை, உக்குவளை பிரதேச செயலகப் பிரிவுகளில் அமைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

வீடுகளில் வெடிப்பு, மண்மேடு சரிவு, நீர் ஊற்றுகளின் எண்ணிக்கை அதிகரிப்பு என்பன குறித்த பகுதிகளில் அதிகம் பதிவாகியுள்ளதுடன், அவ்வாறான இடங்களுக்கு குழுக்கள் அனுப்பி ஆய்வுகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் உக்குவளை, இரத்தோட்டை ஆகிய பகுதிகளியே அதிகம் அனர்த்தங்கள் பதிவாவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



# ஜீவனின் பிறந்த தினம்

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் 27ஆவது பிறந்தநாள் நேற்றாகும் (09). இந்நிலையில், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களும் 60 இளைஞர்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு உபகரணங்களும் (9) கொட்டகலையிலுள்ள சி.எல்.எப்பில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன. (மலையக நிருபர்கள்)

தொழிற்சங்க நடவடிக்கையால்

# கிளினிக் சென்றவர்கள் அவதி

■ ரஞ்சித் ராஜபக்ஸ

16 சுகாதார தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து நேற்று (9) ஆரம்பித்த தொழிற்சங்க நடவடிக்கையால், ஹட்டன்-டிக்கோயா கிளங்கன் ஆரம்ப வைத்தியசாலைக்கு மாதாந்த கிளினிக் நடவடிக்கைக்கு வருகைத் தந்தவர்கள் பாரிய சிரமங்களை எதிர்கொண்டனர்.

இவ்வாறு நேற்றைய தினம் வருகை தந்தவர்களை, இன்று (10) மீண்டும் வருமாறும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய மருந்துகளை இன்றைய தினம்



பெற்றுக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டு, திருப்பி அனுப்பப்பட்டனர்.

நேற்றைய தினம் கிளினிக் நடவடிக்கைகளுக்காக வருகை தந்து திரும்பிச் சென்றவர்களுள் பலர், கொட்டும் மழையிலும் தூர இடங்களிலிருந்து வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



இராகலையில் காட்டாறை

# அகலப்படுத்தும் பணிகள் ஆரம்பம்

■ ஆ.ரமேஸ்

இராகலை தோட்டத்தை ஊடுருவி ஓடும் காட்டாறை, அகலப்படுத்தி ஆழப்படுத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த காட்டாறின் பெருக்கத்தால், கடந்த ஒக்டோபர் மாதம் தொடக்கம் தொடர்ந்தும் பெய்து வரும் மழையால் பாரிய பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையில், இத்தோட்டத்தில் மேற்குறித்த காட்டாறுக்கு அண்மித்த பகுதியில் குடியேறியுள்ள குடும்பங்களின் வீடுகள், விவசாய காணிகளுக்குள் ஆற்று நீர் உட்புகுந்ததால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இப்பாதிப்புகளுக்கு முகம் கொடுத்து வந்த ஏழு குடும்பங்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வந்துள்ளனர்.

இந்த நிலையில், நுவரெலியா மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில், தற்போது இராகலை தோட்டம் மத்திய பிரிவு தோட்டத்தில் சுமார் ஒரு கிலோ மீட்டர் தூர காட்டாறை அகலப்படுத்தி, தூர்வாரி சுத்தப்படுத்தும் நடவடிக்கையை வலப்பனை பிரதேச செயலகம் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும், இராகலை தோட்டத்தில் தொடர்ச்சியாக மழைக்காலங்களில் நிலவும் காட்டாறு வெள்ளம் பாதிப்புக்குறித்து, தாம் கவனம் செலுத்தியுள்ளதாகவும், இதன் காரணமாக மேலும் மக்கள் தொடர்ச்சியாக பாதிப்புக்களுக்கு முகம் கொடுக்காத வகையில் ஆற்றினை அபிவிருத்தி செய்து மக்கள் பாதுகாப்பை உறுதி செய்யு நடவடிக்கை எடுக்கப்படும் என நுவரெலியா இடர் முகாமைத்துவ நிலைய முகாமையாளர் ஆர்.அழகசோன் நம்பிக்கை தெரிவித்தார்.



கோணக்கலை சிவசுப்ரமணியர் கோவிலின்

# முருகன் சிலை மாயம்

■ நடராஜா மலர்வேந்தன், தனராஜா

கோணக்கலை- காவத்தை தோட்டத்தில் உள்ள, 50 வருடங்கள் பழைமை வாய்ந்த சிவசுப்ரமணியர் கோவிலின் காணப்பட்ட உலோகத்திலான முருகனின் சிலை இனந்தெரியாத நபர்களால் திருடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (8)மாலை வேளையில், கோவில் கதவு திறக்கப்பட்டிருந்ததுடன் சிலை காணாமல் இருப்பதை அறிந்த தோட்ட மக்கள் பசறை பொலிஸாருக்கு முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பசறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ருவன்வெல்ல பிரதேசத்துக்கு

# அடுத்த வருடம் புதிய பஸ் டிப்போ

■ என். ஆராச்சி

ருவன்வெல்ல பிரதேசத்தில் புதிய இ.போ.ச பஸ் டிப்போ ஒன்றை அமைக்க, இலங்கை போக்குவரத்து சபை நடவடிக்கை எடுத்துள்ளது என, கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுதத் மஞ்சுள தெரிவித்துள்ளார்.

இந்த டிப்போவானது, ருவன்வெல்ல, மாகம்ம பிரதேசத்திலுள்ள ரயில்வே திணைக்களத்துக்குரிய இடத்தில் தற்காலிகமாக அமைக்கப்படவுள்ளதென்றும் இதற்கான பணிகள் நேற்று முன்தினம் (8) ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் ருவன்வெல்ல- மொரவத்த பிரதேசத்தில் டிப்போ நிரந்தரமாக அமைக்கப்படும் என்றும் இந்த பணிகள் அடுத்த வருடம் ஜனவரி மாதமளவில் நிறைவடையும் என்றார்.

இதன்மூலம் ருவன்வெல்ல, யட்டியாந்தோட்டை, தெஹியோவிட்ட பிரதேச செயலகங்களுக்குரிய இடைவீதிகளுக்கான பஸ் சேவைகளும் ஆரம்பிக்கப்படும் என்றார்.

கண்டி மாவட்டத்தில்

# 169 பேர் பாதிப்பு

■ சேஹ்ன் செனவிரத்ன

சீரற்ற வானிலைக் காரணமாக, கண்டி மாவட்டத்தில் 38 குடும்பங்களைச் சேர்ந்த 169 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என, கண்டி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவி பணிப்பாளர் தேசப்பிரிய பண்டார தெரிவித்துள்ளார்.

மேலும் இதனால் 32 சொத்துகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், இதில் இரண்டு வர்த்தக நிலையங்களும் உள்ளடங்குவதாகவும் தெரிவித்த அவர், எனினும் உயிர் ஆபத்துகள் எதுவும் இதுவரை கண்டி மாவட்டத்தில் பதிவாகவில்லை என்றார்.

அத்துடன், மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள இடங்களில் வசித்த 7 குடும்பங்களைச் சேர்ந்த 37 பேர், பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் இவர்களுக்கான நிவாரண உதவிளை வழங்குவதற்காக கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னக்கோனால், சகல பிரதேச செயலாளர்களுக்கும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின்

# 'iPURSE 2021' சர்வதேச ஆய்வு மாநாடு

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 'iPURSE 2021' சர்வதேச ஆய்வு மாநாடு நாளையும் (11) நாளை மறுதினமும் (12) இடம்பெறவுள்ளது. முக்கியத்துவம் மிகுந்த இம்மாநாட்டினை இம்முறை அப்பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம் ஏற்பாடு செய்துள்ளது.

இணையவழியாக இடம்பெறவுள்ள 'iPURSE 2021' இன் பிரதம அதிதியாக, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் 18 ஆவது துணைவேந்தரும் மருத்துவருமான பேராசிரியர் சந்திரிகா என். விஜயரத்ன கலந்துகொள்ளவுள்ள

அதேவேளை, இம்மாநாட்டின் ஆதார சுருதியுரையை, ஆசியத் திரைப்படவியல் மற்றும் தொடர்பாடற் கோட்பாடுகளில் மிகுந்த புலமைத்துவம் உடையவரும் ஹவாய் பல்கலைக்கழகத்தில் சேவையாற்று பவருமான பேராசிரியர் விமல் திசநாயக்க ஆற்றவுள்ளார். இம்மாநாட்டுக்கான சிறப்பு ஆய்வுரைகள் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அஜந்த தர்மசிரி, ஹொங்கொங் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மலிக் பீரிஸ் ஆகியோரால் ஆற்றப்படவுள்ளன.

இலக்கியம், பண்பாடு, விஞ்ஞானம், தொழில்நுட்பம், கல்வியியல், சுற்றுச்சூழலியல் என பல்வேறு விடயப்பரப்புகளையும் தன் தொனிப்பொருட்களாகக் கொண்டுள்ள 'iPURSE 2021' சர்வதேச ஆய்வு மாநாடானது, தற்போது உலகம் எதிர்கொண்டு வரும் முக்கிய சவாலான கொரோனா பெருந்தொற்று சார் பிரச்சினைகள் மற்றும் தீர்வுகள் ஆகியவை தொடர்பான ஆய்வுகளுக்கும் இடமளிக்கின்றது. மாநாட்டின் தொனிப்பொருட்களுக்கு அமைவாக 571 ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# புதினம் பார்க்கச் செல்வது உயிருக்கே உலை வைத்துவிடும்

நாட்டின் பல பாகங்களிலும் கடந்த சில வாரங்களாக நிலவிக்கொண்டிருக்கும் சீரற்ற வானிலையில் தாக்கம் ஒவ்வொரு நாளும் சீறிக்கொண்டே இருக்கிறது. இதனால், இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டு, ஆங்காங்கே உயிர்கள் காவுக்கொள்ளப்படுகின்றன.

கனமழைக்காலத்தில், மண்சரிவுகள், வெள்ளப்பெருக்கு உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களால், மனித உயிர்கள் காவு கொள்ளப்படுவது வழக்கமாகிவிட்டது. இதற்கு, மனிதர்களாகிய நாமே பொறுப்புகூற வேண்டியவர்களாய் நிற்கின்றோம்.

இயற்கையின் மீதான ஆக்கிரமிப்பால், இயற்கையின் கோரத்தாண்டவத்துக்கு முகங்கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையே ஏற்பட்டுள்ளது. அதற்கப்பால், வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, நீர்நிலைகளைப் புதினம் பார்க்கச் சென்ற பலரும் மரணத்தை தழுவிக்கொண்டுள்ளனர் என்பது கசப்பான அனுபவங்களாகும்.

சீரற்ற வானிலையை அடுத்து ஏற்படக் கூடுமென எதிர்பார்க்கப்பட்ட இடங்களில், முப்படையினரும் உஷார் நிலையில் நிற்கின்றனர். இன்னும் சில பிரதேசங்களில் களத்தில் நின்று, மீட்புப் பணிகளில் ஈடுபடுகின்றனர். வெள்ளநீரைத் தடுப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறான செயற்பாடுகளின் போது, மீட்பு பணியாளர்களுக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டுமே தவிர, உபத்திரவமாக இருந்துவிடக்கூடாது.

இந்த இயற்கை சீற்றத்தால், நிர்க்கதிக்கு உள்ளாகியிருக்கும் பலரும், தற்காலிக முகாம்களில் தங்கியிருக்கிருக்கின்றனர். அவ்வாறானவர்களுக்கு உதவிக்கரம் நீட்டவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துகளுக்கு இடமில்லை. எனினும், உலகையே ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் குறித்தும் விழிப்பாகவே இருக்கவேண்டும்.

உதவிக்கரம் நீட்டப்போய் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகிவிடக்கூடாது. ஏனெனில், எந்த ரூபத்துக்குள் நுழைந்து கொரோனா தொற்றிக்கொள்கிறது என்பது புரியாமலே இன்னுமிருக்கிறது.

மண்சரிவு உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்கள் ஏற்படக்கூடுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கும் பிரதேசங்களில் வாழ்வோர், அங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்வது காலத்தின் கட்டாயமாகும்.

வானிலை தொடர்பில் கூறப்படும் எதிர்வுகூறல்களுக்குச் செவிசாய்க்க வேண்டும். மழைக்காலத்துக்கு முன்னரே, பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து கொண்டிருக்கவேண்டும். அதனூடாகவே, ஏற்படக்கூடிய மனித உயிரிழப்புகளைத் தவிர்த்துக் கொள்ளமுடியும்.

இந்த வெள்ளத்துக்குப் பின்னர், மற்றுமோர் எதிரியான 'டெங்கு' தொடர்பிலும் அவதானமாக இருக்க வேண்டும். இல்லையேல், தொடர்ச்சியாக துன்பங்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்க வேண்டியதாக இருக்கும். மழைக்காலங்களில் வெள்ளம், சூறாவளி என்பதற்கு அப்பால், இடி, மின்னல் குறித்தும் அவதானமாக இருக்கவேண்டும்.

அக்காலப்பகுதியில், வீடுகளுக்குள்ளே இலத்திரனியல் உபகரணங்களைப் பயன்படுத்துவதை முழுமையாகத் தவிர்த்தல், உயிர்களுக்கு உத்தரவாதம் அளிப்பதாய் இருக்கும்.

இயற்கையை சுரண்டுவதன் ஊடாகவே, சில இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுகின்றன என்பதை நினைவில் கொண்டு, எதிர்காலத்திலாவது இவ்வாறான இயற்கை அனர்த்தங்கள் ஏற்படாமல் இருக்கவேண்டுமாயின், முன்கூட்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் செய்துகொள்வது மட்டுமன்றி, இயற்கையின் மீதான அன்பு, ஆதரவை அதிகரிப்பதே உசிதமானதாக அமையும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




'ஒரே நாடு, ஒரே சட்டம்'

# கவனத்தை திசைதிருப்பும் செயலணி



எம்.எஸ்.எம். ஐயூப்

நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி இருக்கிறது. இன்றைய வேகத்தில், விலைவாசி ஏறிய ஒரு காலம், இதற்கு முன்னர் வரலாற்றில் ஒருபோதும் இருந்ததா என்பது சந்தேகமே. இருந்தால், அது 1972-1974 கால கட்டத்தில் மட்டுமே!

தற்போது, இலங்கையில் சாதாரண மக்களால் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு, நாளுக்கு நாள் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்கிறது. பல அத்தியாவசியப் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடும் நிலவுகிறது. இந்த நிலைமையைச் சமாளிக்க முடியாமல் அரசாங்கம் திணறுகிறது.

இதற்கிடையில் தான், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஒக்டோபர் 26ஆம் திகதி 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற எண்ணக்கருவை நடைமுறைப்படுத்துவதற்காக, ஜனாதிபதி செயலணி ஒன்றை நியமித்து இருக்கிறார்.

அந்தச் செயலணியின் தலைவராக, கடும் இனவாதியும் சர்ச்சைக்குரிய பிக்குவுமான கலகொடஅத்தே ஞானசார தேரர் நியமிக்கப்பட்டுள்ளார். 13 உறுப்பினர்களைக் கொண்ட செயலணியில் ஒன்பது சிங்களவர்களும் நான்கு முஸ்லிம்களும் உள்ளடக்கப்பட்டு உள்ளனர். தமிழர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை. பெண் பிரதிநிதிகளும் இல்லை.

அரசியலமைப்பின்படி சட்டத்தை நிலைநாட்டுவதற்காகவும் எந்தவொரு பிரஜையும் இன, மத, சாதி அல்லது வேறெந்த அடிப்படையிலும் பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்படுவதை தடுப்பதற்காகவும், தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் அங்கிகரிக்கப்பட்ட மனிதநேய பண்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காகவும் சகல பிரஜைகளும் சட்டத்தின் முன் சமமாக மதிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காகவுமே இந்தச் செயலணி நியமிக்கப்பட்டுள்ளதாக அது தொடர்பான வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில், 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற சித்தாந்தத்தை அமலாக்குவதைப் பற்றி ஆராய்ந்து, அதற்கான சட்ட வரைவைத் தயாரிப்பது இந்தச் செயலணியின் பொறுப்பாகும். 'உங்கள் அறிவு, ஞானம், திறமை, விசுவாசம் ஆகியவற்றின் மீது நம்பிக்கை வைத்து, உங்களை இந்தச் செயலணிக்கு நியமிக்கிறேன்' என, ஜனாதிபதி செயலணி உறுப்பினர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

மேலோட்டமாக பார்க்கும் போது, இந்தச் செயலணியின் நோக்கம் மிகவும் உன்னதமானதாகவே தெரிகிறது. வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள அதன் நோக்கங்களை, எவராலும் நிராகரிக்க முடியாது. ஆனால், செயலணி நியமிக்கப்பட்ட நேரம், அதன் உள்ளடக்கம், பணிகள் ஆகியவற்றைப் பார்க்கும் போது, பல சந்தேகங்கள் ஏற்படுகின்றன.

இன்று நாட்டில், சட்டத்தின் முன் சகலரும் சமமாக மதிக்கப்படுவதில்லை என்பது உண்மையே. ஓர் ஏழை எதற்காகவாவது குற்றஞ்சாட்டப்பட்டால், அவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதிலும் குற்றஞ்சாட்டப்பட்ட செல்வந்தர் ஒருவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதிலும் பாரிய வேறுபாடு காணப்படுகிறது.

ஏழை, பொலிஸ் நிலையத்துக்கு இழுத்துச் செல்லப்படுவார்; செல்வந்தர் அழைத்துச் செல்லப்படுவார். செல்வந்தர் அல்லது அதிகாரம் உள்ளவர்கள், "இன்று என்னால் பொலிஸ் நிலையத்துக்கு வர முடியாது; மற்றொரு நாளில் வருகிறேன்" என்று கூற முடியும். ஆனால், ஏழைக்கு அது முடியாது. குற்றஞ்சாட்டப்பட்ட ஏழை தாக்கப்படுவார். ஆனால், சிலவேளை செல்வந்தரால், பொலிஸார் தான் தாக்கப்படுவார்.

அரசியல்வாதிகளும் உயரதிகாரிகளும் நாட்டில் கோடிக் கணக்கான ரூபாய் பெறுமதியான பொதுச் சொத்துகளை அபகரிப்பது தொடர்பான, ஆயிரக் கணக்கான சம்பவங்களைக் கடந்த பல தசாப்தங்களாக அறிகிறோம். ஆனால், எத்தனை பெரும் புள்ளிகள் தண்டிக்கப்பட்டுள்ளார்கள்? ஒரே நாட்டில், ஒரே சட்டம் இல்லை.

இது ஒரு புறம். மறுபுறத்தில், அரச ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் சட்டம் ஒரே விதமாகச் செயற்படுவதில்லை. ஆளும் கட்சியின் ஆதரவாளர்களுக்கு எதிரான வழக்குகள், சிலவேளை எவ்வித காரணமும் காட்டாது வாபஸ் பெறப்படுகின்றன. குறிப்பாக, சிறுபான்மையினர் பாதிக்கப்பட்ட சம்பவங்களில், படையினர் அல்லது பிக்குகள் சம்பந்தப்பட்டு இருந்தால், அவர்களைத் தொடக்கூட, சட்டத்தின் கை சிலவேளைகளில் எட்டாது.

இவ்வாறு, சட்டம் பல்வேறு தரப்பினருக்கு பல்வேறு விதமாகச் செயற்படுவதைப் பற்றி எத்தனையோ உதாரணங்களைக் காட்டலாம். ஆனால், 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்று கூறும் போது, எவருக்கும் இந்த விடயங்கள் நினைவுக்கு வருவதில்லை. நினைவுக்கு வருவது, முஸ்லிம்களின் மத்ரஸாக்கள், முஸ்லிம் தனியார் சட்டத்தின் கீழான காதி நீதிமன்றம், பலதாரமணம் போன்றவையே ஆகும்.

தனியார் சட்டங்கள், வேறு சில சமூகங்களுக்கும் இருக்கின்றன. யாழ்ப்பாணத் தமிழர்களின் தேசவழமை, கண்டி தனியார் சட்டம் போன்றவையாகும். அதேபோல், பௌத்தர்களின் விகாரைகள், விகாரை நிலங்கள் தொடர்பானதொரு சட்டமும் இருக்கிறது. அது, தனியார் சட்டமாகக் கருதப்படாவிட்டாலும், அதுவும் ஒரு சமூகத்துக்காக மட்டும் உள்ள சட்டமாகும். ஆனால், 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்று கூறும் போது, இவற்றில் எதுவும் நினைவுக்கு வருவதில்லை.

'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற சுலோகத்தை அறிமுகப்படுத்தியவர் ஞானசார தேரரே. 2012ஆம் ஆண்டு, அவர் முஸ்லிம் விரோத பிரசாரங்களை ஆரம்பித்த போதே, அதை அறிமுகப்படுத்தினார். எனவே, இச்சுலோகமானது முஸ்லிம் விரோதத்தின் சின்னமாகவே, நாட்டு மக்கள் மனதில் பதியப்பட்டுள்ளது. அதனால் தான், இச்சுலோகத்தைப் பற்றிக் கூறும் போது, நாட்டில் இடம்பெறும் மாபெரும் பாகுபாடுகளோ அல்லது, ஏனைய தனியார் சட்டங்களோ நினைவுக்கு வருவதில்லை.

இந்தச் செயலணி நியமிக்கப்பட்ட நேரமும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும். பொருளாதார நெருக்கடியின் காரணமாக, அரசாங்கத்தின் ஜனரஞ்சகத்தன்மை வெகுவாகக் குறைந்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் நாலக்க கொடஹேவா, கடந்த மார்ச் மாதமே கூறியிருந்தார். இவ்வாறு, செல்வாக்குச் சரிந்து வரும் நிலையில் தான், கடந்த வருடம் செப்டெம்பர் மாதம், மாடறுப்பை அமைச்சரவை தடை செய்யத் தீர்மானித்தது. அதன்படி, தேவையான சட்டங்களின் திருத்தங்கள் ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி, அமைச்சரவையால் அங்கிகரிக்கப்பட்டன.

முஸ்லிம்களைக் குறிவைத்தே, இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அப்போது பலர் கூறினர் அத்தோடு, செப்டெம்பர் மாதம் 13ஆம் திகதி, ஞானசார தேரர் 'ஹிரு' தொலைக்காட்சியில் தோன்றி, மிக மோசமான முறையில் முஸ்லிம்களின் மத நம்பிக்கைகளை பரிகசித்தார். சில நாள்களுக்குப் பின்னர், அரச தொலைக்காட்சியான 'ரூபவாஹினி'யும் பேட்டிக்காக அழைத்தது. அப்போதும் அவர், அந்த விஷத்தைக் கக்கினார்.

"அரசாங்கத்தை மக்கள் வெறுக்க ஆரம்பித்து விட்டார்கள்" என்று, அடுக்கடுக்காக அரசாங்கத்தின் அமைச்சர்களே கூறும் பின்னணியிலேயே, நன்கு திட்டமிடப்பட்ட வகையில், முஸ்லிம்களைச் சீண்டும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. அவற்றில் ஓர் அம்சமாகவே, இந்தச் செயலணி நியமிக்கப்பட்டுள்ளது.

அதாவது, நாடு எதிர்நோக்கி இருக்கும் பொருளாதார பிரச்சினைகள் காரணமாக, நாட்டில் இன உணர்வுகளைத் தூண்ட வேண்டிய ஒரு தேவை, அரசாங்கத்துக்கு இருக்கிறது போலும். பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாததால், மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதே இதன் நோக்கமாகும்.

நாட்டுக்கு புதிய அரசியலமைப்பை வரைவதற்காகவென, அமைச்சரவையால் சிரேஷ்ட சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வாவின் தலைமையில் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட நிபுணர் குழுவொன்று, 2020ஆம் ஆண்டு செப்டெம்பர் மூன்றாம் திகதி நியமிக்கப்பட்டது.


அதேவேளை, நீதி அமைச்சர் அலி சப்ரி, முஸ்லிம் தனியார் சட்டம் உள்ளிட்ட பல சட்டங்களைத் திருத்தி அமைக்க, நடவடிக்கை எடுத்து வருகிறார். அவ்வாறு இருக்க, இந்தச் செயலணி எதற்காக?

நாட்டில், ஒரே சட்டத்தை அறிமுகப்படுத்துவது தொடர்பாக, நீதி அமைச்சால் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ள சட்ட வரைவுகளை ஆராய்ந்து, பொருத்தமான திருத்தங்களை அவற்றில் சேர்ப்பதும் இந்தச் செயலணியின் பணிகளாகும். அக்கடமையை நிறைவேற்றுவதற்கான சட்டத்துறை தேர்ச்சி, இந்தச் செயலணியின் தலைவரான ஞானசார தேரரிடமும் அதன் உறுப்பினர்களிடமும் இருக்கின்றனவா என்பது கேள்விக்குறியாகும்.

காதி நீதிமன்றங்களில் தீர்ப்பு வழங்குவதில், அநீதி இடம்பெறுகிறது என்பது ஞானசார தேரர் போன்றோர் முன்வைக்கும் குற்றச்சாட்டாகும். அது முற்றிலும் மறுக்கக்கூடியதல்ல. எனவே, முஸ்லிம் தனியார் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதே பெரும்பாலான முஸ்லிம்களின் நிலைப்பாடாகும்.

ஆனால், குறைப்பாடு இருப்பதால், அந்த நீதி முறையையே ஒழிக்க வேண்டுமா? தாம் ஒரு குற்றவாளியைத் தப்பிக்கச் செய்வதற்காக வழங்கிய தீர்ப்பொன்றுக்காக, பிரதம நீதியரசர் ஒருவர், பின்னர் நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கேட்ட நாடு இது. அதற்காக, இலங்கையில் நீதிமன்றங்களை மூடிவிட வேண்டுமா?

எதிர்க்கட்சிகள், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உள்ளிட்ட பலர், இந்தச் செயலணிக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். ஞானசார தேரர், பல முறை சட்டத்தை மீறி, நீதிமன்றத்தையும் அவமதித்த ஒருவர் என்பதும் அவர்கள் சுட்டிக் காட்டும் ஒரு காரணமாகும்.



## வாழ்வியல் தரிசனம்

உண்மை பேசுவதில் எந்தப் பிரச்சினைகளும் இல்லை. உண்மை என்பது தூய்மை; நேர்மையின் வெளிப்பாடு. உண்மையற்றவன், சதா கலக்கத்துடனே வாழ்க்கையை ஓட்டுவான்.

சரியான விடயங்களைப் பிழை எனக் கூறமுடியாது. எனினும் விதண்டாவாதம் செய்யும் துஷ்டர்களுக்கு, நேர்மையான உரைகள் பிடிக்காது.

எடுத்த எடுப்பில் பேசும் வார்த்தைகளில் பொய்யை மட்டும் பேசும் நபர்களுடன் பழகினால், கேட்பவர்களின் நிலை தடுமாற்றம்தான். கெட்டவர்ளின் எண்ணங்கள் மிகவும் அழுக்கானவை.

வதந்திகளால் மக்கள் ஏமாறுவதை நாங்கள் அறிந்திருக்கின்றோம். எதையும் ஆராயும் திறன் பலருக்கு இல்லை.

எக்காரணம் கொண்டும் பிள்ளைகள் முன், பொய்பேசி நம்பவைக்கலாகாது. உண்மையைச் சொன்னால், அவர்கள் உணர்ந்து கொள்வார்கள்.

பொய் பேசுவதால் எந்தக் காரியங்களும் அனுகூலங்கள் அடைவதே கிடையாது. தற்காலத்தில் நாங்கள் செய்யும் செயல்களே, எதிர்காலத்தில் இணைந்து கொள்ளும். உண்மையை மட்டும் பேசுக! இனிய வாழ்வின் ஆதாரம் வாய்மையில் அடங்கி உள்ளது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### இரணைதீவு மக்கள் மழையால் பாதிப்பு

கிளிநொச்சி, இரணைதீவு மக்கள் கடும் மழையால் பாதிக்கப்பட்டுள்ளனர். யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர்தான், தமது பூர்வீக மண்ணில் சுயமாகக் குடியமர்ந்தனர்.

தற்போது, 84 குடும்பங்கள் இத்தீவில் வாழ்ந்து வருகின்றனர். மக்கள் சுயமாக குடியமர்ந்த போது, அரசியல் கட்சிகளாலும் உதவி அமைப்புகளாலும் தற்காலிகக் குடிசைகள் அமைப்பதற்கு கிடுகுகள், மரங்கள் வழங்கப்பட்டன. இவ்வாறு மக்கள் புதிதாகத் தமது வாழ்வை ஆரம்பித்தார்கள்.

தற்போது பெய்து கொண்டிருக்கும் பலத்த மழைக்குள், இக்குடும்பங்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன. நிரந்தர வீடுகள் இல்லை; தற்காலிக வீட்டில் இருந்து, மழைக்கு பாதுகாப்பாகச் சென்று தங்குவதற்கு பாடசாலை, பொது மண்டபம், தேவாலயம் என்பன, முழுமையாகப் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.

ஏற்கெனவே, வைத்திய வசதி, குடிநீர் வசதி என்பன இல்லாத நிலையில், இரணைதீவு மக்கள் துன்புறும் நிலையில், வானிலையும் அவர்களுக்குப் பெரும் பாதிப்புகளை உருவாக்கி, அவர்களது நிம்மதியைக் குலைத்து வருகின்றது.

கடந்த இரண்டு ஆண்டுகளில், இரணைதீவு பாடசாலையைப் புனரமைத்திருந்தால், இவ்வாறான வானிலை சீர்கேடான வேளைகளில், மக்கள் அப்பாடசாலையில் தங்கலாம். பாடசாலையும் புனரமைக்கப்படவில்லை; பொது மண்டபமும் புனரமைக்கப்படவில்லை. இந்நிலையில், இரணைதீவு மக்கள் கடும் மழைக்குள் பெரும் அவலங்களை எதிர்கொண்டுள்ளனர்.

நடராசா கிருஸ்ணகுமார்

திருப்புவனம்

# நீந்தி ஐவரை காப்பாற்றிய சாரதி

சிவகங்கை, திருப்பு வனம் அருகே ஆற்று கால்வாய் தண்ணீருக்குள் காருடன் விழுந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரைக் கால்வாயில் நீந்திச் சென்று காப்பாற்றிய சாரதியை பலரும் பாராட்டி வருகின்றனர்.

வைகை ஆற்றில் இருந்து மாரநாடு கண்மாய்க்கு மதுரை-இராமேசுவரம் நான்கு வழிச் சாலையையொட்டிய கால்வாயில் ஆற்றுநீர் செல்கிறது.

இந்நிலையில் மானாமதுரை பகுதியைச் சேர்ந்த கணவர், மனைவி, 2 குழந்தைகள், ஒரு முதியவர் என 5 பேர் காரில் மதுரையில் இருந்து ஊருக்கு சென்றுள்ளனர்.

திருப்புவனம் அடுத்த இந்திரா நகர் பகுதியில் சென்றபோது, எதிர்பாராதவிதமாக கார் மாரநாடு



கால்வாய்க்குள் விழுந்தது. கால்வாயில் 6 அடி ஆழம் இருந்ததாலும், தண்ணீரின் ஓட்டம் அதிகமாக இருந்ததாலும் அவர்கள் காரிலேயே சுமார் ஒரு மணி நேரமாக தவித்தனர்.

அந்த சமயத்தில் அவ்வழியாக திருப்புவனம் வடகரையைச் சேர்ந்த தனியார் நிறுவன சாரதி முத்துக்கிருஷ்ணன் (29) காரில் ராமநாதபுரம் சென்றார். கால்வாயில் கார் கவிழ்ந்து கிடந்ததை பார்த்து, முத்துக் கிருஷ்ணன் இறங்கி பார்த்தபோது, காருக்குள் 5 பேர் சிக்கி இருப்பது தெரியவந்தது.

இதையடுத்து முத்துக் கிருஷ்ணன் துணிச்சலாக கால்வாயில் நீந்தி சென்று காரில் தவித்த 5 பேரையும் காப்பாற்றினார். முத்துக்கிருஷ்ணனின் இச் செயலை அவரது நண்பர்கள் சமூக வலைதளங்களில் வைரலாக்கினர். இதையடுத்து முத்துக்கிருஷ்ணனுக்கு பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

திருவண்ணாமலை

## கணவன் இறந்ததால் மனைவியும் மரணம்

கணவர் இறந்த அதிர்ச்சியில் மனைவியும் உயிரிழந்தது, உறவினர்களை சோகத்தில் ஆழ்த்தியது. இச்சம்பவம், திருவண்ணாமலை, ராமநாதபுரம் கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

மண்பாண்ட தொழிலாளியான இவருக்கு, ஒரு மகனும்,ஒரு மகளுமுள்ளனர். மகள் திருமணமாகி வெளியூரில் வசித்து வருகிறார். இரு நாட்களுக்கு முன், கணவருக்கு திடீரென மயக்கம் ஏற்பட்டது; வேலூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர்



அங்கேயே உயிரிழந்தார்.

அவரது உடல், வீட்டுக்கு கொண்டு வரப்பட்டது. கணவர் உடலை பார்த்து கதறி அழுத மனைவி, திடீரென மயங்கி விழுந்து அவரும் உயிரிழந்தார். கணவர் இறந்த துக்கம் தாளாமல் மனைவியும் உயிரிழந்தது, உறவினர்கள் மத்தியில் மேலும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.


ரோத்தக்

### புனித நூல் திருட்டு வழக்கு;

## குர்மீத் ராமிடம் விசாரணை

சீக்கியர்களின் புனித நூலான 'குரு கிரந்தம்' திருடப்பட்ட வழக்கு தொடர்பாக, 'தேரா சச்சா சௌதா' என்ற அமைப்பின் தலைவர் குர்மீத் ராம் ரஹிம் சிங்கிடம் பொலிஸார் நேற்றுமுன்தினம் விசாரணை செய்தனர்.

ஹரியானா மாநிலம் சிர்சாவில் தேரா சச்சா சௌதா ஆசிரமம் உள்ளது. இதன் தலைவர் குர்மீத் ராம் ரஹீம் சிங், ஆசிரமத்தில் இருந்த இரு பெண்களைப் பலாத்காரம் செய்ததாகக் குற்றச்சாட்டு எழுந்தது. இதுதொடர்பான வழக்கில், அவருக்கு 20 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. பத்திரிகையாளரை சுட்டுக் கொன்ற வழக்கிலும் குர்மீத் ராம் ரஹீம் சிங்குக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. குர்மீத், சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். பஞ்சாப் மாநிலம் பரீத்கோட்



அருகே உள்ள ஜவஹர் சிங் லாலா என்ற கிராமத்திலுள்ள குருத்வாராவில் இருந்த, சீக்கியர்களின் புனித நுலான 'குரு கிரந்த சாகிப்' 2015இல் திருடு போனது. அடுத்த சில நாட்களில் அப்பகுதியில் குரு கிரந்தத்தை அவமதிக்கும் வகையில் விமர்சித்து போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. இந்த சம்பவத்துக்கு பின்னணியில் குருமீத் ராம் ரஹீம் சிங் இருப்பது பொலிஸ் விசாரணையில் தெரிந்தது.



புதுடெல்லி

### வீடியோ கொன்பரன்சிஸ் விசாரணை

## தொடர உச்ச நீதிமன்றம் மறுப்பு

கொரோனா காரணமாக, பின்பற்றப்பட்ட 'வீடியோ கொன்பரன்ஸ்' விசாரணையை நிரந்தரமாக்க முடியாதென உச்ச நீதிமன்றம் மறுத்துள்ளது.

கொரோனா பரவலைத் தடுக்கவும், நீதிமன்ற வளாகத்தில் கூட்டத்தைக் குறைக்கவும், நீதிமன்றங்களில் தற்காலிக ஏற்பாடாக வீடியோ கொன்ரபன்ஸ் வாயிலாக விசாரணைகள் நடக்கின்றன. இந்நிலையில் விரைந்த நீதிக்கான சமூக கூட்டமைப்பு சார்பில், உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அதில், வீடியோ கொன்பரன்சிஸ் விசாரணை, மனுதாரர்களின் அடிப்படை உரிமை என்பதால், அதை நிரந்தரமாக பின்பற்ற உத்தரவிடும்படி கோரப்பட்டிருந்தது. இந்த மனு, உச்ச நீதிமன்ற நீதிபதி எல்.நாகேஸ்வர ராவ் தலைமையிலான அமர்வு முன் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.

வீடியோ கொன்பரன்ஸ் விசாரணையை நடத்துவதில் பிரச்சினையுள்ளது. கொரோனாவுக்கு முன், 60 - 65 வழக்குகளை நடத்தி வந்த நிலையில், வீடியோ கொன்பரன்சில், ஓராண்டு அனுபவத்துக்கு பின்னும் தற்போது, 30-35 வழக்குகளைத் தான் விசாரிக்க முடிகிறது.

மூத்த வழக்கறிஞர்கள் நேரில் ஆஜராகி வாதிடுவதைத் தான் விரும்புகின்றனர். நேரிலும், வீடியோ வாயிலாகவும் இரு வகை விசாரணை நடத்தியதில் பயனளிக்கவில்லை. மக்கள் நீதிமன்றத்துக்கு வருவதில்லை. 70 ஆண்டுகளாக நீதி அணுகுமுறை தொடர்பாக எந்த புகாரும் வந்ததில்லை. இப்போது வந்துள்ளது. இயல்பு நிலை திரும்பி, நீதிமன்றங்கள் வழக்கம் போல செயல்பட வேண்டும். வீடியோ கொன்பரன்ஸ் விசாரணையை நிரந்தரமாக்க முடியாது. வழக்கு விசாரணை தள்ளி வைக்கப்படுகிறது.இவ்வாறு உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

சேலம்


## நீர்மட்டம் 119 அடியாக நிறுத்தம்

திடீர் வெள்ளப் பெருக்கைச் சமாளிக்க, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மேட்டூர் அணையின் நீர்மட்டம் 119 அடியாக நிலை நிறுத்தப்பட்டுள்ளதாக தமிழக அரசாங்கம் அறிவித்துள்ளது.

மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்றுமுன்தினம் இரவு 8 மணி அளவில் 118 அடியை எட்டியது. அணைக்கு வினாடிக்கு 30 ஆயிரம் கன அடி வீதம் நீர் வந்து கொண்டிருந்தது.

இந்நிலையில், அணை முழு கொள்ளளவை எட்டியவுடன் அணைக்கு வரும் நீர் முழுவதையும் காவிரியில் வெளியேற்ற வேண்டிய நிலை ஏற்படும் என்ற சூழல் காணப்பட்டது.

இந்நிலையில், மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று



அதிகாலை 5 மணி அளவில் 119 அடியை எட்டியது. அணைக்கு வினாடிக்கு 26,440 கன அடி வீதம் நீர் வந்து கொண்டிருந்தது.

இந்நிலையில் மேட்டூர் அணையின் உபரி நீரால் டெல்டா மாவட்டங்களில் பாதிப்பு ஏற்படுவதை தடுக்க திட்டமிடப்பட்டது. எனவே மேட்டூர் அணையின் நீர்மட்டத்தை 119 அடியாக நிலைநிறுத்தி, அணையில் இருந்து வினாடிக்கு 20 ஆயிரம் கனஅடி நீர் மட்டும் காவிரியில் தற்போது வெளியேற்றப்பட்டு வருகிறது.

வில்லியனூர்

## குண்டு வீசித் தீ வைத்ததில் வாகனங்கள் நாசம்

வில்லியனூர் அருகே கல்லூரி உரிமையாளர் வீட்டில் டீசல் குண்டு வீசி, தீவைத்ததில் கார் எரிந்து சாம்பலானது. வில்லியனூர் சுல்தான்பேட்டை வளர்பிறை நகரை சேர்ந்த அரிதேவன் பாலகிருஷ்ணன் ராக் கல்வி நிறுவனத்தில் பங்குதாரராகவுள்ளார்.

வீட்டில் தனது கார் மற்றும் மோட்டார் சைக்கிளை நிறுத்தி வைத்திருந்தார். கடந்த திங்கட்கிழைம நள்ளிரவில் மர்ம நபர்கள், ஐந்து பொலித்தின் பைகளில் டீசல் நிரப்பி, அதனை கார் மற்றும் பைசிக்கிள் மீது வீசி, தீ வைத்து விட்டுச் சென்றுள்ளனர். அவ்வழியாக சென்றவர் பார்த்து, வீட்டாருக்கு தகவல் தெரிவித்தார். அதை தொடர்ந்து தீயை அணைத்தனர். இந்த தீ விபத்தில் காரின் பின்பறம் எரிந்து சேதமானது.மர்ம கும்பல் வீசிய டீசல் பைகளில் ஒன்று மட்டும் பிரியாமல் காரின் கீழே விழுந்து கிடந்தது. டீசல் என்பதால் எளிதில் தீ பரவாமல், பெரிய தீ விபத்து தடுக்கப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

சென்னை

## மூன்றாவது நாளாக முதலமைச்சர் ஆய்வு

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள கொரட்டூர் உள்ளிட்ட பகுதிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மூன்றாவது நாளாக நேரில் சென்று ஆய்வு செய்தார்.

வடகிழக்குப் பருவமழை காரணமாக தமிழகம் முழுவதும் கனமழை பெய்து வருகிறது. குறிப்பாக சென்னை முழுவதும் மழை பாதிப்பு அதிகரித்துள்ளது.

குறிப்பாக, தண்டையார்பேட்டை, கோடம்பாக்கம், திரு.வி.க. நகர், சோழிங்கநல்லூர், பெருங்குடி பகுதிகளில் அதிக அளவிலான மழைநீர் தேங்கியது. தேங்கியுள்ள மழை நீரை மோட்டார்கள் மூலம் வெளியேற்றும் பணியில் மாநகராட்சி



ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், வீடுகளை விட்டு வெளியேறி, உணவின்றித் தவிக்கும் பொதுமக்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

இந்நிலையில் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முதலமைச்சர் ஸ்டாலின், நேரில் ஆய்வு மேற்கொண்டார். அதிக பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, பால் போன்ற அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார்.

# இயற்கையின் தாண்டவத்தில்…

நாடளாவிய ரீதியில் கடந்த சில வாரங்களாக நிலவும் சீரற்ற வானிலையை அடுத்து, ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, வான் பாய்தல் உள்ளிட்ட படங்கள் சிலவற்றை காணலாம் (படங்கள்: தமிழ்மிரர் நிருபர்கள்)




யாழ்ப்பாணத்தில்



மன்னாரில்



அம்பாறையில்



வல்வெட்டித்துறையில்

பாகிஸ்தான்

# தலிபான்களுடன் யுத்த நிறுத்தத்துக்கு இணக்கம்

பாகிஸ்தானும், உள்ளூர் தலிபான் ஆயுததாரிகளும் ஒரு மாத யுத்த நிறுத்தத்துக்கு இணங்கியுள்ளனர் என பாகிஸ்தானின் தகவலமைச்சர் பவாட் சௌத்ரி நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இரண்டு தரப்புகளும் இணங்கினால் யுத்த நிறுத்தமானது நீடிக்கப்படலாம் என சௌத்ரி மேலும் கூறியுள்ளார்.

ஆப்கானிஸ்தான் தலிபானிலிருந்து வேறான பாகிஸ்தான் தலிபான் அல்லது தெஹ்ரீக்-ஈ-தலிபான் பாகிஸ்தான் ஆனது, பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்திலுள்ள அரசாங்கத்தை அகற்றி, இஸ்லாமிய ஷரியா சட்டத்தை அமல்படுத்த ஆண்டுக்கணக்காக முயல்கிறது.

இந்நிலையில், ஆப்கானிஸ்தான் தலிபான் தலைவர்களின் உதவியுடன் ஆப்கானிஸ்தானிலேயே இரண்டு தரப்புகளும் சந்தித்துள்ளன.



அந்தவகையில், நேற்று அமுலுக்கு வந்த யுத்த நிறுத்தமானது அடுத்த மாதம் ஒன்பதாம் திகதி வரை நீடிக்கவுள்ளதாக தெஹ்ரீக்-ஈ-தலிபான் பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.



போலந்து

## பெலாரஸ் எல்லையில் அகதிகளை முடக்கிய போலந்து

பெலாரஸுடனான போலந்தின் கிழக்கு எல்லையில் போலந்துக்குள் நுழைய முயன்ற அகதிகளின் முயற்சிகளை முறியடித்துள்ளதாக போலந்து தெரிவித்துள்ளது.

இந்நிலையில், நெருக்கடி சந்திப்பொன்றுக்கு அழைப்பு விடுத்திருந்த போலந்து அரசாங்கம், பிராந்தியத்தில் 12,000 படைகளைத் தரையிறக்கியிருந்தது.

எல்லையை நோக்கி அகதிகளை பெலாரஸ் தள்ளுவதாக பெலாரஸை போலந்து குற்றஞ்சாட்டியுள்ளது.

அண்மைய மாதங்களில் சட்ட ரீதியற்ற முறையில் பெலாரஸிலிருந்து தமது நாடுகளுக்குள் நுழைய முயல்வோரின் எண்ணிக்கையானது அதிகரித்துள்ளதாக போலந்து, லித்துவேனியா, லத்தீவியா ஆகியன தெரிவித்துள்ளன.

இந்த அகதிகளில் பெரும்பாலோனோர் மத்திய கிழக்கு, ஆசியாவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

பிரேஸிலில்

## இடதுசாரி லுலாவை எதிர்கொள்ள வலதுசாரிக் கட்சியில் பொல்ஸ்னரோ

பிரேஸிலின் தீவிர வலதுசாரி ஜனாதிபதி ஜைர் பொல்ஸ்னரோ, மத்திய வலதுசாரி லிபரல் கட்சியுடன் இணைந்து கொள்வார் என அக்கட்சியின் தலைவர் வல்டெமர் கொஸ்டா நெட்டோ நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இதை உறுதிப்படுத்தியுள்ள ஜனாதிபதி பொல்ஸ்னரோ, இவ்வாரம் இது இடம்பெறலாம் எனக் கூறியுள்ளார்.

முன்னாள் இடதுசாரி ஜனாதிபதியான லூலா டா சில்வாவை அடுத்தாண்டு ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி பொல்ஸ்னரோ எதிர்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகையில், அதற்கான முதல் நகர்வாக இது பார்க்கப்படுகின்றது.

எவ்வாறெனினும், ஜனாதிபதி பொல்ஸ்னரோவோ அல்லது முன்னாள் ஜனாதிபதி லுலாவோ, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதை இன்னும் அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.





சியர்ரா லியோன்

## தாங்கி வெடிப்பு: உயிரிழந்தோரின் எண்ணிக்கை 115ஆக உயர்வு

சியர்ரா லியோனின் தலைநகர் பிறீடௌணில், எண்ணெய்த் தாங்கி வெடிப்பில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 115ஆக உயர்ந்துள்ளதாக சுகாதார அமைச்சின் பேச்சாளர் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, கடந்த வெள்ளிக்கிழமை தாங்கி வெடித்தபோது 99 பேர் கொல்லப்பட்டதாக சுகாதாரமைச்சு தெரிவித்திருந்தது.

தாய்வான்

## முக்கிய துறைமுகங்களை சீனா முடக்கலாம்

தாய்வானின் முக்கிய துறைமுகங்கள், விமானநிலையங்களை முடக்கக்கூடிய வல்லமையை சீனாவின் ஆயுதப் படைகள் கொண்டிருப்பதாக தாய்வானின் பாதுகாப்பமைச்சு நேற்றுத் தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவிக்க சீனாவின் பாதுகாப்பமைச்சானது உடனடியாகப் பதிலளித்திருக்கவில்லை.

தாய்வானைச் சூழ இராணுவ நடவடிக்கையை சீனா அதிகரிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தாய்வானை தமது பிராந்தியமாகவே சீனா நோக்குகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



## மெக்ஸிக்கன் நகரை நோக்கி அகதிகள்



மெக்ஸிக்கோவின் தலைநகரான மெக்ஸிக்கோ நகரத்தை நோக்கி தொடரணியாக அர்ரியாகாவில் அகதிகள் செல்கின்றனர்.

இருபதுக்கு – 20 உலகக் கிண்ணம்:

# நமீபியாவை வென்ற இந்தியா







சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில், ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற நமீபியாவுடனான குழு இரண்டு சுப்பர் 12 போட்டியில் இந்தியா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

நமீபியா: 132/8 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: டேவிட் விஸே 26 (25), ஸ்டீபன் பார்ட் 21 (21), ஜான் பிரைலிங்க் ஆ.இ 15 (15), ம்,இஷெல் வான் லிங்கென் 14 (15), ருபென் ட்ரம்பெல்மன் ஆ.இ 13 (06) ஓட்டங்கள். பந்துவீச்சு: இரவீந்திர ஜடேஜா 3/16 [4], இரவிச்சந்திரன் அஷ்வின் 3/20 [4], ஜஸ்பிரிட் பும்ரா 2/19 [4])

இந்தியா: 136/1 (15.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: ரோஹித் ஷர்மா 56 (37), லோகேஷ் ராகுல் ஆ.இ 54 (36), சூரியகுமார் யாதவ் ஆ.இ 25 (19) ஓட்டங்கள்)

போட்டியின் நாயகன்: இரவீந்திர ஜடேஜா

இந்நிலையில், அபு தாபியில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதிப் போட்டியில், நியூசிலாந்தை இங்கிலாந்து எதிர்கொள்கின்றது.

## கல்முனையில் பூப்பந்தாட்ட உள்ளரங்கு திறப்புவிழா

■ நூருல் ஹுதா உமர், எம்.என்.எம். அப்ராஸ்

கல்முனையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள வின்னர்ஸ் பூப்பந்தாட்ட உள்ளக அரங்கமானது, அரங்கின் ஸ்தாபகர் ஆசிரியர் யூ.எல்.எம். ஹிலாலின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அக்கரைப்பற்று மாநகர உறுப்பினரும், அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல் சம்மேளனத் தலைவருமான எஸ். எம். சபீஸ் கலந்து கொண்டு பூப்பந்தாட்ட உள்ளக அரங்கினை திறந்து வைத்தார்.

இதேவேளை, இந்நிகழ்வில் கல்முனை பொலிஸ் நிலைய பிரதம பொலிஸ் பரிசோதகர் ஏ.எல். எம். வாஹீட், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் உட்பட பிராந்திய விளையாட்டுக் கழகங்களின் பிரதானிகளும் வீரர்களும் கலந்து கொண்டனர்.







## சம்பியனான புத்தளம் ஜூவனைல் விளையாட்டுக் கழகம்

■ எம்.யூ.எம். சனூன்

புத்தளம் லிவர்பூல் கால்பந்தாட்ட மைதானத்தில் நடைபெற்ற அணிக்கு ஏழு பேரைக் கொண்ட கால்பந்தாட்டத் தொடரில் புத்தளம் ஜுவனைல் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியுள்ளது.

புத்தளம் ஜே.எச். கட்டடக் கலை நிறுவனத்தின் அனுசரணையில் நடைபெற்ற இத்தொடரில் 12 அணிகள் பங்கேற்றன.

விலகல் அடிப்படையில் நடைபெற்ற இத்தொடரில், 2-0 என்ற கோல் கணக்கில் இறுதிப் போட்டியில் ஜெல்ஸி அணியை வென்றே ஜுவனைல் அணி சம்பியனாயிருந்தய்து.

ஜுவனைல் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் முஹம்மது நசீம் பெற்றிருந்தார்.

சிறந்த வீரராக ஜுவனைல் அணியின் முஹம்மது நசீமும், சிறந்த கோல் காப்பாளராக அதே அணியின் கோல் காப்பாளர் எம். பரோஜும் தெரிவாகினர்.

ஜுவனைலுக்கு 20,000 ரூபாய் ரொக்கப்பணமும், இரண்டாமிடம் பெற்ற ஜெல்ஸி அணிக்கு 10,000 ரூபாய் ரொக்கப்பணமும் பரிசுத் தொகையாக வழங்கி வைக்கப்பட்டன.





## சிநேகபூர்வ போட்டியில் வென்ற லக்கி

அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகத்துடனான சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் லக்கி விளையாட்டுக் கழகம் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய லக்கி, 30 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு, 155 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பிரண்ட்ஸ், 30 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்று 16 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

லக்கி விளையாட்டுக் கழகத்தின் தலைவரும், ஊடகவியலாளருமான எஸ்.எம். அறூஸின் அழைப்பை ஏற்று வருகை தந்த லங்கா பிறீமியர் லீக்கின் ஜஃப்னா கிங்ஸின் கிரிக்கெட் பணிப்பாளர் கணேசன் வாகீசன், இப்பிராந்திய கிரிக்கெட் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றம் குறித்து வீரர்கள் மத்தியில் உரையாற்றினார்.

மிகச்சிறந்த கிரிக்கெட் வீரர்களை தேசிய மட்டத்திலுள்ள கிரிக்கெட் அணிகளில் விளையாடுவதற்கான வாய்ப்பபை ஏற்படுத்தித் தருவதுடன் அதற்கான வசதிகளை செய்து தருவதாகவும் வாகீசன் இங்கு குறிப்பிட்டார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 10 நவம்பர் 2021, இல. 08, ஹுணுப்பிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.